# திருக்கோயில்

செப்டம்பர் 1991 விலை ரூ. 3






# "மாண்புமிகு முதலமைச்சரின் கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி".

வருமானம் இல்லாத கோவில்களில் வழிபாடு நடத்துவதற்காகவும் பராமரிக்கவும் "முதல் அமைச்சரின் கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி" என்ற நிதியை மாண்புமிகு முதல் அமைச்சர் **புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா** அவர்கள் அமைத்துள்ளார்கள். இதற்கு முதல் நன்கொடையாக 1 லட்சத்து 8 ரூபாயை அவர்கள் வழங்கி இருக்கிறார்கள்.

இதுகுறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது :

தமிழ்நாடு பழம்பெரும் கோவில்களின் உறைவிடம் ஆகும். ஆனால் ஆயிரக்கணக்கான சிறு கோவில்கள் சிதைந்த நிலையில் உள்ளன.

அவைகளில் பெரும்பாலானவற்றில் பல்லாண்டுக் காலமாக திருப்பணி வேலைகள் நடத்தப்படவில்லை. மேலும் பல கோவில்கள் அன்றாட வழிபாடுகூட நடத்த முடியாத வறிய நிலையில் உள்ளன.

இப்படிப்பட்ட கோவில்களுக்கு எந்த வகையில் நம்மால் உதவ முடியும் என்று நான் சிந்தித்து வந்தேன். இந்தக் கோவில்களுக்குத் திருப்பணி செய்யவும் அவற்றைப் பராமரிக்கவும் பெருந்தொகை தேவைப்படுகிறது.

இந்தச் சீரிய பணிக்கு பொது மக்களிடம் இருந்து நன்கொடையாக பொருளுதவி பெறுவது விரும்பத்தக்கதாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

இதன் அடிப்படையில் "**முதல் அமைச்சரின் கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி**" என்ற நிதியை ஏற்படுத்த தமிழ்நாடு அரசு தீர்மானித்து உள்ளது.

இந்த நிதிக்கு கொடை உள்ளம் படைத்தோர், தொழில் அதிபர்கள், பொதுமக்கள் ஆகிய அனைவரும் நன்கொடை வழங்கலாம்.

சீரமைப்பு தேவைப்படும் சிறு கோவில்களில் திருப்பணியினை மேற்கொள்ளவும், அவைகளை நல்ல நிலையில் பராமரிக்கவும் இந்நிதி பயன்படுத்தப்படும்.

இந்நிதியில் இருந்து உதவிகோரும் கோவில்களுக்கு நிதி வழங்கும் அதிகாரம் பெற்றவர் தமிழ்நாடு முதல் அமைச்சர் ஆவார்.

அவ்வாறு உதவிபெறும் கோவில்களில் இந்தத் தொகை முறையாக பயன்படுத்தப்பட்டதா என்பதை சரிபார்க்கும் அதிகாரம் பெற்றவராக அரசின் வணிக வரி மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் அல்லது இதற்கென முதல் அமைச்சரால் அங்கீகரிக்கப்படும் அலுவலர் செயல்படுவார்.

இந்த நிதிக்கு முதல் நன்கொடையாக நான் 1 லட்சத்து 8 ரூபாய் வழங்கி உள்ளேன்.

இந்த நன்கொடையோடு முதல்-அமைச்சரின் கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி தொடங்கப்படுகிறது.

இச்சீரிய பணிக்கு தாராளமாக நன்கொடை வழங்குமாறு கொடையுள்ளம் கொண்டோரையும், தொழிலதிபர்களையும், பொதுமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் கூறியுள்ளார்கள்.

முகப்பு:

அருள்மிகு இராஜஇராஜேஸ்வரி

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 பிரஜோற்பத்தி ஆண்டு புரட்டாசி செப்டம்பர் 1991 விலை ரூ. 3-00 | மணி 9 |
|---|---|---|

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

பத்தூர் அருள்மிகு நடராஜர் சிலை மீட்டுப் பெறும் விழா.
ஆசிகள் கூறி வாழ்த்துகின்றார்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்.

அருளாளர்களின் அருள்அனுபவங்கள்
—திருமந்திரச்செம்மல்
டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

கந்தவேள் கருணை
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

சித்திரபாரதம்
—செவ்வேள்

ஸ்ரீவராக அவதாரம்
—ஜெயஸ்ரீ மூகாம்பிகை

ஞானக்குழந்தை
—டாக்டர் இரா. நாகசாமி

நூல் மதிப்புரை—நிறைமதி

ஆடல் காணீரோ, திருவிளையாடல் காணீரோ
—கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்


அம்பாளை வழிபடுவதன் பலன்
— தவத்திரு ஸ்ரீசந்திரசேகரேந்திர
சரஸ்வதி சுவாமிகள்

சமயங்களின் நோக்கம் சமுதாயத் தொண்டே
— பேராசிரியை மரியம் உல் ஆசியா
எம்.ஏ. பிஎட்., எம்ஃபில், எம்.எல்.ஏ.

கம்பரின் இராமாவதாரம்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

வாசகர் எண்ணங்கள்

"மாண்புமிகு முதல் அமைச்சரின் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி"..



# பத்தூர் அருள்மிகு நடராஜர் சிலை மீட்டுப் பெறும் விழா



*16 ஆண்டுகளுக்கு முன் லண்டனுக்கு கடத்தப்பட்ட பத்தூர் அருள்மிகு நடராஜர் சிலை, தமிழ்நாட்டுக்கு மீட்டுக் கொண்டு வரப் பட்டது. அச்சிலையை மாண்புமிகு தமிழக முதல்வர் **புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா** அவர்களிடம் இங்கிலாந்து நாட்டின் இந்திய தூதர் டாக்டர் எல். எம். சிங்வி அவர்கள் 9-8-91 அன்று தலைமைச் செயலகத்தில் நடை பெற்ற விழாவின்போது ஒப்படைத்தார்கள்.*

நடராஜர் சிலையை பெற்றுக் கொண்ட மாண்புமிகு முதல் அமைச்சர் **புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா** அவர்கள் அந்த சிலைக்கு முன்பு உள்ள குத்துவிளக்குகளை ஏற்றி வைத்து வழிபட்டார்.

நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிலையைப் பெற்றுக்கொண்டு ஆற்றிய சிறப் புரை பின்வருமாறு:

''தஞ்சை மாவட்டம் பத்தூர் அருள்மிகு விசுவநாதசுவாமி கோவிலைச் சேர்ந்த விலை மதிக்க முடியாத நடராஜர் சிலையை இங்கி லாந்து நாட்டிற்கான இந்தியத் தூதர் டாக்டர் சிங்வி அவர்களிடமிருந்து பெறுகின்ற, வணிக வரி மற்றும் அறநிலையத்துறையினரால் நடத்தப்படுகின்ற இந்த விழாவில் பங்கு கொள் வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ் நாட்டில் இருந்து கடத்தப்பட்டு, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பம்பர் டெவலப்மெண்ட் கார்ப்பரேசன் நிறுவனத்




**மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குத் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமிகு டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்., அவர்கள் நினைவுப் பரிசு வழங்குகிறார்கள்.**

திற்கு விற்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாக லண்டன் மாநகரத்தில் ராயல் நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் வெற்றி பெற்று, விலை மதிக்க முடியாத இந்த நடராஜர் சிலை நமக்குத் திரும்பவும் கிடைத்ததன் நினைவாக கொண்டாடப்படும் இந்த விழா நம்மால் மறக்க முடியாத விழாவாகும்.

12-7-91 அன்று லண்டனில் உள்ள இந்தியத் தூதரகத்திலிருந்து டெல்லிக்கு வழங்கப்பட்ட இந்த சிலையை சென்னையில் என்னிடம் ஒப்படைப்பதற்காக மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டு மாண்புமிகு சிங்வி அவர்கள் இங்கு வந்துள்ளார்கள்.

சிலையை ஒப்படைப்பதற்காக சிங்வி அவர்கள் தனிப்பட்ட முறையில் எடுத்துக் கொண்ட இந்த முயற்சி நமது நெஞ்சை நெகிழ வைக்கிறது. மேலும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகவும், இந்தச் சிலையை என்னிடம் நேரடியாக ஒப்படைப்பதற்காகவும் அவர் சென்னைக்கு வந்திருப்பது தமிழக மக்கள் மீது அவர் கொண்டிருக்கிற தளராத ஆர்வத்தைக் காட்டுகிறது.

நமது சட்ட வரலாற்றில் ஒரு மாநில அரசு வெளிநாட்டில் உள்ள நீதிமன்றத்தில் வழக்கை நடத்தி வென்றது இதுவே முதல் முறையாகும்.

இந்த வெண்கல நடராஜர் சிலை 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியை சேர்ந்தது என அதன் வடிவமைப்பு நமக்கு எடுத்துக் காட்டுகிறது. இந்தச் சிலை எப்படி இங்கிலாந்து மாநகருக்குக் கடத்தப்பட்டது என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும்.

பத்தூரில் உள்ள அருள்மிகு விசுவநாத சுவாமி ஆலயத்தில் தற்போது சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதாலும், கும்பாபிஷேகம் நடைபெற உள்ளதாலும் இந்த இடைக் காலத்தில் ஆறுமாத காலத்திற்கு பாதுகாப்பாக இந்தச் சிலை, திருவாரூரில் உள்ள விக்கிரகங்கள் பாதுகாப்புக் கூடத்தில் வைக்கப்படும்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடுமையான சட்டப் போராட்டங்களுக்கு பிறகு நமக்கு கிடைத்திருக்கிற பத்தூர் நடராஜர் விக்கிரகத்தினைத் திரும்பப் பெறுவதிலே நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த விக்கிரகத்தினைத் திரும்பப் பெறுவதிலே நடைபெற்ற வழக்கில் பங்கு கொண்ட அனைவருக்கும் மீண்டும் தமிழக மக்கள் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



# ஆசிகள் கூறி வாழ்த்துகின்றார்

## டாக்டர் த. அமிர்தலிங்கம்

ஆலயம் காக்க அரும்பணி ஆற்ற
சாலவும் பொற்றவம் புரிந்தனர் முன்னாள்
மேலையம் நாட்டில் மறைந்ததாம் ஆடல்
கோலத்தார் எழிற்சிலை மீட்டனர் இந்நாள்

(ஆலயம் காக்க)

அப்பரும் சம்பந்தர் சுந்தரருமே
ஆசிகள் கூறி வாழ்த்துகின்றார்
செப்பரும் சாதனை இதுவென்றே
செகத்தினர் யாவரும் போற்றுகின்றார்

(ஆலயம் காக்க)

கோயில்கள் யாவும் திருப்பணி காண
தூய்மையில் ஓங்கிப் பூசையும் காண
நாடியே திட்டம் இவர்வகுத் தாரே!
நாட்டினில் இவர்போல் வேறினி யாரே!

(ஆலயம் காக்க)

மாதமும் மும்மாரி மழைபொழியும்
காவிரி கங்கையைப் போல் நீர்பெருக்கும்
சோலை பயிர்வளங்கள் கனிகுலுங்கும்
யாவும் ஈசன்அருள் நலம் விளங்கும்

(ஆலயம் காக்க)

மறைந்த பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் பத்தூர் நடராஜர் விக்கிரகம் தமிழ் நாட்டிற்குத் திரும்ப கிடைப்பதற்கு எடுத்துக் கொண்ட தளராத முயற்சியினை நான் நினைவு கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இது தொடர்பாக அவர் தமிழக அரசிற்கு எழுதிய கடிதத்தில் இந்த விக்கிரகம் விலை மதிக்க முடியாத தேசிய சொத்து என்பதால் இந்தச் சிலையை தமிழகத்திற்குக் கொண்டு வருகிற போக்குவரத்துச் செலவினையும், வழக்கிற்கு உண்டான செலவுத் தொகையினையும் மத்திய அரசின் பண்பாட்டுத் துறையே ஏற்கும் என்று தெரிவித்திருந்தார்கள்.

விலைமதிக்க முடியாத நமது கலாசார பொக்கிஷங்கள் வெளிநாடுகளால் கொள்ளை அடிக்கப்பட்டபோது சூழ்நிலைகளால் இதையெல்லாம் அமைதியாக தாங்கிக் கொள்ள வேண்டியிருந்தது. அந்த சகாப்தத்திற்கு இது முற்றுப்புள்ளி வைக்கிறது.

மேலும் இந்தியத் தூதரக அதிகாரிகள் ஆற்றிய தொண்டிற்கும், வழங்கிய அறிவுரைகளுக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக தமிழ் நாட்டின் முன்னாள் ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் மற்றும் தற்போதைய இங்கிலாந்து நாட்டிற்கான இந்தியத் தூதர் டாக்டர் சிங்வி மற்றும் தூதரக அலுவலர்களுக்கும் எனது நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிக்கலான சட்ட நுணுக்கங்களைக் கையாண்டு மிகவும் திறமையாக வாதாடியதால் தான் நமக்கு இந்த வழக்கில் வெற்றி கிடைத்திருக்கிறது. இவ்வழக்கில் வாதாடி நமக்கு வெற்றியினை ஈட்டித் தந்து உதவிய பாஸ்கர் கோபார்டே மற்றும் லாரன்ஸ் கிரஹாம் ஆகிய வழக்கறிஞர்கள் இல்லா விட்டால் இவ்வழக்கில் நாம் வெற்றி பெற்றிருக்க முடியாது. அவர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

அதேபோல், இது தொடர்பான வழக்கில் தேவையான புலனாய்வினையும் மற்றும் சாட்சியங்களையும் வழங்கி சிலையைத் திரும்பப்பெற அரும்பணியாற்றிய முன்னாள் டி.ஜி.பி. மோகன்தாஸ், தற்போதைய காவல்துறைத் தலைவர் (ஐ.ஜி.) கே. கே. ராஜசேகரன் நாயர், முன்னாள் சட்டத்துறைச் செயலாளர் எஸ். வடிவேலு, தடயவியல் இயக்குநர் பேராசிரியர் சந்திரசேகரன், அறநிலையத்துறை முன்னாள் இணை ஆணையாளர் சூரியராஜ் ஆகியோருக்கும் குறிப்பாக தொல்பொருள் ஆய்வுத்துறையின் முன்னாள் இயக்குநர் டாக்டர் நாகசாமி அவர்களுக்கும் நம்முடைய நன்றி உரித்தாகுக.

தமிழக சரித்திரத்தில் நினைவு வைத்துக் கொள்ளத் தக்கதும், தனித்த புகழ் பெற்றதுமான மறக்க முடியாத இந்தச் சிறப்பு நிகழ்ச்சியில் பங்கு கொண்ட உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்டவாறு மாண்புமிகு முதல் அமைச்சர் **புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா** அவர்கள் கூறினார்.

இவ்விழாவின் தொடக்கத்தில் தலைமைச் செயலாளர், திருமிகு **டி. வி. வெங்கட்ராமன்** ஐ.ஏ.எஸ்., அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசும்போது கூறியதாவது:

''எந்த இடத்திற்கு சொந்தமானதோ அந்த இடத்திற்கே நடராஜர் சிலை திரும்ப வந்து இருக்கிறது.

இதைத் திரும்ப பெறுவதற்காக நாம் சட்டப்படி போராட வேண்டி இருந்தது. இந்தச் சட்டப் போரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வழக்கு நடந்து கொண்டு இருக்கும்போது ஒரு கட்டத்தில் சமாதானம் பேச வந்தனர். ஆனால் மறைந்த முதல் அமைச்சர் **டாக்டர் எம். ஜி. ஆர்.** அவர்கள் எப்படியும் இந்த சிலையை நாம் சட்ட பூர்வமாக வென்று திரும்ப கொண்டு வரவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள்.

இதுபோல விலை மதிக்க முடியாத சிலைகள் தமிழ்நாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான கோவில்களில் இருக்கின்றன. இவற்றைப் பாதுகாக்கவும், புதுப்பிக்கவும் நம் மாண்புமிகு முதல் அமைச்சர் ஒரு நிதியை சமீபத்தில் ஏற்படுத்தியுள்ளார்கள். இதற்கு தாராளமாக இப்போது நன்கொடை வந்து கொண்டு இருக்கிறது. பொது மக்கள் இதில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சிலை திரும்பக் கிடைத்துள்ளது சிலை திருடுபவர்களுக்கும் கடத்துபவர்களுக்கும் கடும் எச்சரிக்கையாக அமைந்துள்ளது.''

மேற்கண்டவாறு தலைமைச் செயலாளர் திருமிகு **டி. வி. வெங்கட்ராமன்** ஐ.ஏ.எஸ்., அவர்கள் கூறினார்.

விழாவின் நிறைவில் அரசின் வணிகவரித் துறை மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு **எஸ். ஆர். கருப்பண்ணன்** ஐ. ஏ. எஸ். அவர்கள் நன்றி கூறினார்கள்.



# அருளாளர்களின் அருள் அனுபவம்




## திருமந்திரச்செம்மல் டி.வி.வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்

திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள், தலைமைச் செயலகம், சென்னை-600 009.


**(5)**



'திருமந்திரச் செம்மல்'
திருமிகு டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.,

பொதுவாக அன்றாட வாழ்க்கையில் ஈடுபடும் மக்கள் தாங்கள் யார் என்றும், தங்களுடைய நிலை யாது என்றும் சிந்திக்க வாய்ப்பும், நேரமும் கிட்டாமல் கவலையற்றவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். தன்னைப் பற்றிய கவலையே எடுத்துக் கொள்ளாத இவர்கள் எல்லாவற்றிற்கும் மேலான பரம் பொருளைப் பற்றி எங்கே கவலைப்படப் போகின்றார்கள்? இவர்களுக்கு உலகம்தான் கடவுள். இந்த உலகத்தில் வாழ்ந்து வருவதையே குறிக்கோளாக வைத்து இறக்கும் வரை தடுமாறிக்கொண்டு வாழ்கின்றனர். வேறு சிலர் இருக்கின்றார்கள். அவர்கள் தங்களுடைய உடம்பினையே கடவுள் என்று கருதி, அதைப் பேணுவதையே முக்கியமான எண்ணமாக வைத்து, வாழ்வைநடத்திப்பின்னர் மறைந்துவிடுகின்றார்கள். சற்று தீவிரமாக சிந்திப்பவர்கள் மனம் ஒன்று உள்ளது என்பதை உணர்ந்து கொண்டு அதையே கடவுளாக நினைத்து அதைக் கட்டுப்படுத்த இயலாமையால் மிக்கத் துன்பத்துடன் வாழ்வைக் கழித்துவிடுகின்றார்கள். இன்னும் சிறிது பக்குவம் பெற்ற சிலர் உடலைத் தவிர உயிர் ஒன்று வேறாக உள்ளது என்பதை அறிந்து கொள்கின்றார்கள். உயிரையே கடவுள் என்றும் சொல்லிக் கொள்வார்கள். இத்தகைய வேறுபாடுகள் நிறைந்து கிடக்கும்பொழுது உண்மையான நிலை என்ன என்பதை மக்கள் சரியாக உணர்ந்து கொள்ளவில்லையென்றால் அதில் வியப்பு ஒன்றுமில்லை.

திருமூலரைப் போன்ற ஒப்பற்ற யோகிகள் மெய்ப்பொருளையும் அத்துடன் நமக்கு இருக்கக்கூடிய தொடர்பையும் தம்முள்ளேயே உணர்ந்து யோக நெறி மூலமாக இந்த உண்மையை எல்லோரும் உணரமுடியும் என்று நமக்கு விளக்குகின்றார்கள். அவர்கள் மரணமில்லா பெருவாழ்வு பெற்றவர்கள். பூதவுடலைக் கொண்டு அவர்கள் யோகத்தின் சிகரத்தை எட்டி, தெளிந்த அறிவு பெற்றவர்களாக, தான் பெற்ற அனுபவத்தை மக்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்கள்.

இந்த உடம்பானது கருவிக் கூட்டங்களால் ஆனது. உடம்பில் ஐம்பொறிகள் உள்ளன. இவை வழியாக ஐம்புலன்கள் ஓயாமல் மனதை உலக வழியில் பாயுமாறு இழுத்துக் கொண்டே இருக்கின்றன. இந்த ஐம்புலன்களின் வழியே சென்றால் பரம்பொருளைப் பற்றி தியானிப்பது இயலாது. ஐம்பொறிகளுடன் சேர்ந்து இருப்பது மனமாகும். இந்த மனம் சஞ்சல ரூபமானது. ஐம்பொறிகள் மனத்தை ஓயாமல் சஞ்சலமடையச் செய்கின்றன. மனமானது காமம், வெகுளி, மயக்கம் ஆகியவற்றால் சதா உந்தப்பட்டு வருகின்றது. அதன் காரணமாக அறியாமை என்கின்ற திரை நம்மிடமிருந்து மெய்ப்பொருளை மறைத்து வைக்கின்றது. காமம் மனத்தை சதா உறுத்திக் கொண்டே வருகின்றது. இச்சை நிறைவேறா

விடில் கோபம் வருகிறது. கோபம் புத்தியை மயக்குகிறது. விருப்பும் வெறுப்பும் வளரு கின்றன. ஆகவே, காமத்தீயினை கட்டுப் படுத்தி இறைவன்பால் செல்லும்படி மாற்ற வேண்டும். ஐம்புலன்களையும் ஒருமுகமாக்கி உறுதிப்பாடுடன் அவற்றைப் பயன்படுத்த வேண்டும். கோபமே பாபங்களுக்கெல்லாம் தாய் தந்தையாகும். கோபத்தைத் தணித்து மனத்திலே இறை அன்பை நிரம்பச் செய்ய வேண்டும். ஐம்புலன்கள் வழி மனம் செல் வதற்கு பதிலாக, ஐம்புலன்களை மனத்தின் வழி செலுத்த வேண்டும். அறுபத்திமூன்று நாயன்மார்களில் ஒருவரான சண்டேசுவர நாயனார் ''தம்மை ஐந்து புலனும் பின செல் லும்தகையார்'' என்று சிறப்பிக்கப்படுகின்றார். ஐம்புலன்கள் மதம்மிக்க யானைகளைப் போன்றவை. அவற்றைக் கட்டுப்படுத்த அறிவு எனும் விளக்கினை தூண்டி வைக்க வேண்டும். திருநாவுக்கரசர் சுவாமிகள் ''உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக-மடம் படும் உணர்நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்- கடம்பமர் காளை தாதை சுழலடி காணலாமே'' என்பார்.

ஆழ்வார்களில் ஒருவரான பூதத்தாழ்வார் இதே கருத்துடன் ''அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தை இடுதிரியா-நன் புருகி ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன்'' என்று மொழிகின்றார். இறைவனுடைய அருளே இந்த அறிவாக மிளிர்கிறது. இந்த அறிவே மாயா விளக்காக உள்ளத்தில் பிரகாசிக் கிறது. அதாவது ஆதி அந்தம் இல்லாத சோதியே அருளொளி விளக்காக, அறிவொளி யாக மனதில் கொழுந்துவிட்டு எரிகின்றது.

''மனத்து விளக்கினை மாண்பட ஏற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி
அனைத்து விளக்குந் திரியொக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாயா விளக்கே''

(திருமந்திரம்.....602)

யோகநெறி, பாசப்பற்றை நீக்கி, சிற் றுணர்வைக் கட்டுப்படுத்தி ஐயம் நீங்கப்பெற்று தெளிவான காட்சியைப்பெற பயன்படுகின்றது. ஆகவே, மனதைக் கட்டுப்படுத்துவதே யோக மாகும். மனதைக் கட்டுப்படுத்த எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவத்தின்மீது அன்பு வைத்து பல ஒழுக்கங்களைக் கடைபிடிக்க வேண்டும். யோக நெறி என்றால், பொது வாக மக்கள் நாம் அட்ட யோகம் என்று சொல்லப்படும் உடலைப் பற்றிய அப்பியா சங்கள் தொகுக்கப்பட்டுள்ள யோக முறை களைத்தான் நினைத்துக் கொள்வார்கள். பண்டைக்காலம் முதற்கொண்டே நமது நாட் டில் அட்ட யோகம் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன் றாக இருந்து வருகின்றது. ஆனால், திருமூல ருடைய உபதேசம் அட்ட யோக சாதனை யால் மட்டும் சிவ தரிசனத்தை அடைதல் இய லாது என்பதாகும். ஐம்பொறிகளையும், அந்தக்கரணங்களையும் அடக்கி இறைஞான ஒளியை தூண்டச் செய்வதே யோக நெறி என திருமூலர் கூறுவார். திருமூலர் ஓர் சிறந்த யோகியாவார். மூவாயிரம் ஆண்டுகளுக்குத் தவம் இருந்து தனது உடலையும், மனதையும் கட்டுப்படுத்தி, உள்ளொளியைப் பெருக்கி, இறைவனுடைய திருநடனத்தை தம்முள் கண்டு, அதை அனுபவித்து ஆண்டிற்கு ஒரு மந்திரமாக மூவாயிரம் மந்தி ரங்களை அருளிச் செய்துள்ளார். நீண்ட நெடுங்காலம் அவர் வாழ்ந்திருந்தார் என்றால் சிறந்ததொரு யோக நெறியில் அவர் முற்றிலும் தேர்ச்சி பெற்றவராக இருந்திருந்தார். ஆகவே திருமந்திரமாலையில் அவர் விளக்கும் யோக நெறி ஓர் மிக முக்கியமான பகுதியாகும்.

திருமந்திரத்தில் கூறப்படும் நெறி அட் டாங்க யோகம் எனப்படும். அதாவது இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்கிற எட்டுப் பகுதிகளை இந்த யோக நெறி கொண்டுள்ளது. இந்த எட்டு வழிகளையும் தனக்கு இறைவனே போதித்தான் என்று திருமூலர்பிரான் கூறியுள்ளதால் அவை மிக முக்கியமாகும். இந்த நெறியில் பொருந்தி நின்றவர்களுக்கு பிறவியில்லை என்று திரு மூலர் எடுத்துரைக்கின்றார். இவையெல்லாம் பலவித ஒழுக்க நிலைகளாகும். யோக நெறிக்கு ஒழுக்கச் சூழ்நிலை இன்றியமையாதது. ''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்பது குறள் வாசகமாகும். ஆன்மீகப் பற்று பெற விரும்பும் ஒவ்வொருவரும் தன் உள்ளத்திற்கு மாறான ஒழுக்கம் கெட்ட பாதையில் செல்லா மல் காத்துக் கொள்வது மிகவும் முக்கியம், இயமமாவது தீயவைகளைச் செய்யாதிருத்தல் ஆகும். கொல்லாதிருத்தல், பொய் கூறாமை, திருடாமை, ஆராய்ச்சி செய்யும் மனப்பான் மையுடைமை, நல்ல அடக்கமும் பண்பும் உடைமை, நீதி வழுவாத, நெறியில் செல்லுதல் குற்றங்கள் புரியாமை, கள்ளையும், காமத்தை யும் அகற்றுதல் மற்றும் பிறருடன் பகிர்ந்துண் ணும் தன்மை முதலியவை இயமமாகும். நிய மத்தில் நிற்பவர் தூய்மை, கருணை, பொறுமை நேர்மை, வாய்மை போன்ற கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பர். மிதமான உணவு உண்பர். தவம், செபம், போதும் என்கின்ற மனம், கடவுளிடம் நம்பிக்கை, விரதங்களை அனுசரித் தல், உண்மை கேட்டு உணர்தல், தெய்வ பூசை செய்தல் போன்றவற்றைக் கொண்டவர்களா வர். தீய பழக்கங்கள் கடவுள் நம்பிக்கைக்கு உலை வைத்துவிடும். ஆகவே, ஆன்மீக நெறி யில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பு வர்கள் இயமங்களை கட்டுப்பாட்டுடன் அனு சரிக்க வேண்டும்.

அடுத்து யோக முயற்சிகளுக்கு முன்பு ஓர் நல்ல இடத்தில், அமைதியான சூழ்நிலை யில் அமர்ந்துகொண்டு இறைவனை மனதில் வைப்பது ஆசனத்தில் பொருந்துவதாகும். நெடுநேரம் ஓரிடத்தில் இருந்து கொண்டு இறை வனைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமென்றால் அதற்குத் தகுந்தவாறு கை, கால், உடல் உறுப்புகளை லகுவான முறையில் வைத்துக் கொள்வதே சிறந்த ஆசனமாகும்.

அடுத்து வருவது பிராணாயாம பயிற்சியாகும். இது மனதைக் கட்டுப்படுத்துபவர்களுக்கு இன்றியமையாததாகும். பிராண வாயுவும் மனமும் ஒன்றோடு ஒன்று இணைந்தது. பிராணவாயுவை வசம் செய்யாமல் மனமாவது வசமாகாது. பிராணவாயுவை வீண்படாமல் தடுத்தலே பிராணாயாமமாகும். முதலில் பிராண வாயுவைக் கட்டுப்படுத்தி பின்னர் மனத்தை தன்வசம் ஆக்கிக் கொள்ள வேண்டும் சுவாசமாவது இடகலை, பிங்கலை என்று கூறப்படும் இரண்டு நாடிகள் வழியாக மாறி மாறி உட்சென்று வெளிச் செல்கின்றன. இவற்றை ஒன்றுபடுத்த வேண்டும். குதிரையை கடிவாளத்தால் அடக்கலாம். என்றாலும் கடிவாளமே குதிரையை அடக்கிவிடாது. வகையாக கடிவாளத்தை குதிரையின் வாயிலிட்டு அதை மாறி மாறி இழுத்தும், நிறுத்தியும், ஒட்டியும் முயன்றால் குதிரை அடங்கும். இவ்வாறே பிராணாயாமத்தால் மனத்தை வேகம் கெடுத்து ஆளலாம். இதை திருஞானசம்பந்தர் ''ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி'' என்பார். பிராணாயாம பயிற்சியைமுறைப்படி குருவிடம் கேட்டு தெரிந்து கொள்ளுதல் நல்லது. அவ்வாறு செய்தால் சுவாச கதிகள் முறைப்படுத்தப்பட்டு மனத்துடன் ஒன்றி நிற்கும். இதை திருமூலர் ''மனம் எங்குண்டு வாயுவும் அங்கு உண்டு'' என்பார். மனமும் வாயுவும் வயப்படுவதன் மூலமாகத்தான் மேற்கொண்டு தியான சாதனை புரிய இயலும்.

''ஆரிய னல்லன் குதிரை இரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை
கூரிய நாதன் குருவின் அருள்பெற்றான்
வாரிப் பிடிக்க வசப்படும் தானே''
(திருமந்திரம்......565)

பிராணாயாம அப்பியாசத்தினால் உடலிலுள்ள எல்லா நாடிகளும் தூய்மை அடையும். மனம் தெளிவடைந்து புறக்கண்கள் வழியாக செல்வதை விட்டுவிட்டு அகக்கண்கள் வழியாக பார்க்கத் தொடங்கும். ஐம்புல உணர்வுகள் நீங்கிப் போகும். வெளி உலக விஷயங்களைப் பற்றிய நாட்டமும், அறிவும் குறைந்துவிடும். ஐம்புலன்களின் நாட்டம் புறப்பொருள்களை விட்டு பரம்பொருளின் மீது செல்லும். சோர்வு தவிர்க்கப்படும். பிராண வாயுவைக் கட்டுப்படுத்துவதால் உடலாகிய வீட்டிற்கு விரைந்து அழிவில்லை என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இறைசிந்தனையும் வலுவடையும். அப்பொழுது நான் என்கிற நினைவு குறையும். மனமானது இறைவனைத் தவிர வேறொன்றையும் நாடாத நிலையில் அமரும். இந்த நிலையை மாணிக்கவாசகப் பெருமான் ''ஊன் கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என் உள்ளமும் போய் நான் கெட்டவா'' என்று திருத்தெள்ளேணத்தில் பாடுகின்றார். திருமூலருடைய திருவாக்கு பின்வருமாறு:

''நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமும் இல்லை சிவனவ னாமே''
(திருமந்திரம்.......604)

## பரம்பொருள் ஒன்றே

**பசுக்களின் நிறம் பல.**
**ஆனால் பாலின் நிறம் ஒன்று.**
**அதுபோல் பரம்பொருள் ஒருவரே.**

பிராணன் என்கிற குதிரையை கட்டுப்படுத்துவதால் நமக்குக் கிடைக்கும் புத்துணர்வை திருமந்திரம் அழகாக பின்வருமாறு விளக்குகின்றது:

''புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டாற்
கள்ளுண்ண வேண்டாந் தானே களிதருந்
துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னோம் உணர்வுடை யோருக்கே

(திருமந்திரம்.....566)

உள்ளதைச் சொல்லிவிட்டோம் என்று திருமூலர் கூறுகின்றார். இன்பம் வேண்டும் இன்பம் வேண்டும் என்று ஆசையை வளர்த்துக் கொண்டு பல தீய வழிகளை மேற்கொள்ளும் நாம் இதைக் கேட்டாவது உடலுக்கும் உள்ளத்திற்கும் வலிவு கொடுக்கும் ஓர் நெறியை மேற்கொள்ள இன்னும் தயங்க வேண்டுமா?

யோக நெறியில் செல்ல விரும்புபவர்கள் தன்னை அறியவும், இறைவனை அறியவும் முற்படுகிறார்கள். தனக்கும் இறைவனுக்கும் விளக்கமாக நமது உடல் இயங்குகின்றது என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். நமது உடலிலே பல ஆற்றல்கள் இருக்கின்றன. உண்மையில் இந்த ஆற்றல்கள் இறைவனுடைய அம்சமாகிய தேவர்களுடைய இருப்பிடமாக விளங்குகின்றன என்று யோகிகள் கூறுகின்றார்கள். இந்த ஆற்றல்கள் இருக்குமிடங்கள் ஆதாரங்கள் எனப்படும். உடம்பில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்று ஆறு ஆதாரங்கள் உண்டு. இவற்றிற்கும் மேலாவது சகஸ்ரதளம். மூலாதாரம் என்பது அடிநிலை ஆதாரமாகும். இந்த ஆதாரச் சக்திகள் பூவிதழ்களின் அமைப்பைக் கொண்டவை என்றும், பல நிறங்களைக் கொண்டவை என்றும் யோக நூல்களில் கூறப்படுகிறது. மூலாதாரம் நான்கு இதழ்களையும் நான்கு எழுத்துக்களையும் கொண்டது. செவ்வொளி நிறமுடையது. நாற்கோணத்தில் முக்கோண வடிவமுடையது. உந்திக்கு நான்கு விரற்கடை கீழே உள்ளது. இறைவன் பெரும் ஆற்றலாக சிவராசிகளிடையே சக்தி எனும் வடிவில் தோன்றி எழும்புவது; குண்டலினி சக்தி என்கின்ற பேருடன் விளங்கும் இடம் இதுவே. பிரபஞ்சம் இயங்குவதற்கு அடிப்படையாக உள்ள நிலை மூலாதாரமாகும். விஷய அனுபவங்களைப் பெறுவதற்கு புலன்களைத் தூண்டிவிடும் இடமும் இதுவே.

சுவாதிட்டானம் சிவப்பு நிறம் கொண்ட ஆறு இதழ்களையும் ஆறு எழுத்துக்களையும் கொண்டது. குறித்தானத்தில் அமைந்துள்ளது. இங்கிருந்தே யோகப் பயிற்சியின் மூலம் மூலா தாரச் சக்தி மேலெழும்புவதாக யோகிகள் கூறுவர்.

மணிபூரகம் பத்து இதழ்கள், பத்து எழுத்துக்களைக் கொண்டு மூன்று வட்டங் களுடன் நாபித் தானத்தில் அமைந்துள்ளது.

அனாகதம் இருதய ஸ்தானத்தில் பன்னி ரண்டு இதழ்களையும், பன்னிரண்டு எழுத்துக் களையும் கொண்டுள்ளது.

அடுத்து கழுத்துப் பகுதியில் இருப்பது பதினாறு இதழ்களையும், பதினாறு உயிர் எழுத்துக்களையும் கொண்ட விசுத்தியாகும். உயிர்களுடைய சாதாரண உணர்ச்சிகள் குறைந் தும், அறிவு உதிக்கும் இடமாகவும் இது உள்ளது.

இரண்டு இதழ்களையும் இரண்டு எழுத்து களையும் கொண்ட ஆக்ஞை என்கின்ற இட புருவத்தின் நடுவில் உள்ளது. அறிவின் நிலைக் களமாக அமைந்துள்ளது. ''வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு'' என்பார் திருமூலர். இங்கு உலக அறிவு மங்கி, இறை வனைப் பற்றிய அறிவு பிரகாசமடைகின்றது.

மனமானது உலக விஷயங்களைப் பற்றி சிந்திக்கும்போது முதல் மூன்று தானங்களில் சஞ்சரிக்கின்றது. உயர்ந்த மனோபாவங்கள் ஏற்படுவதில்லை. அலை அலையாக ஆசைகள் தோன்றிக்கொண்டே இருக்கும். அந்த நிலை யில் உயிரானது உலக மயமாக குறைந்த ஒளி யுடன் குணமாற்றங்களுக்கு உட்பட்டதாய், பாசங்களுடன் பிணைக்கப்பட்டதாய் நிற்கின் றது. இந்த மூன்று தானங்களிலும் மனதை அடக்கி ஒருமுகப்படுத்திப் பழக வேண்டும். அப்படிச் செய்யாவிடில் மனமாவது பாசத்தில் உழலும். ஆனால் இந்தச் சாதனை எளிதன்று. மணிபூரகத்தானம் வரை எழும் உணர்ச்சிகளை அடக்குவது மிகுந்த அவசியமாகிறது. இதுவே அகப்பூசையில் முதலாவது கட்டமாகும்.

அடுத்து நாபிக்கு நால்விரல் மேலே உள்ள இதயத் தானத்தில் மனதை லயிக்கச் செய்ய வேண்டுமென்று யோகிகள் கூறுவர். ஆன்ம எழுச்சி ஏற்படும் முதல் ஸ்தானம் என்று இதயம் கருதப்படுகின்றது.

கழுத்துப் பகுதியிலுள்ள விசுத்தித் தானத்திற்கு ஓர் சிறப்பு உண்டு. இது சொற்கள் உருவாகும் இடம். இங்கிருந்து சொல்லை வெளிப்படுத்தும் ஆற்றலுக்கு வாணி என்ற பெயர் உண்டு. தியானத்திற்கு சிறந்த இடமாகும்.

இருதயத்தில் இறைவனைப் பூசிக்க வேண்டுமென்று திருமூலர் கூறுவார். அப்படிச் சாதகர்கள் இறைவனை ஞானத்தால் சிந்திக் கச் சிந்திக்க உயிரிடத்திலிருந்து பாசங்கள் நீக்கப்படுகின்றன. மனதிலே அமைதிகலந்த இன்பம் ஏற்படும். ''சடலத் தலைவனை தாம றிந்தாரே'' என்பார் திருமூலர்.

''நடலித்த நாபிக்கு நால்விரன் மேலே
மடலித்த வாணிக் கிருவிரல் உள்ளே
கடலித் திருந்து கருதவல் லார்கள்
சடலத் தலைவனைத் தாமறிந் தாரே''

(திருமந்திரம்.....616)

பிரத்தியாகாரத்தில் மனம் புலன்வழி செல்லாமல் தடுத்து நிறுத்தப்படுகின்றது. கீழ் நோக்கிச் செல்லாமல் மேல் நோக்கிச் செல்ல உதவுவது தாரணையாகும். இவ்வாறு செய் தால் பலகாலம் வாழலாம் என்கின்றார் திருமூலர். ஒரு பொருளைப் பற்றி மாறி மாறி விட்டு விட்டு மனமானது சிந்திக்கும் தன் மையை உடையது. தியான சாதனை வெற்றி பெற வேண்டுமென்றால் மனம் இந்த நிலை யிலிருந்து விடுபட்டு வெளி வரவேண்டும். ஒரு குறிக்கோளை எண்ணி எண்ணி நீண்ட நேரம் அதிலேயே நிலைத்து இருக்க வேண்டும். இவ் வாறு செய்யும் பொழுதுதான் மனம் புலன் களைப் பற்றிய சிந்தனைகளை விட்டு இறைவ னுடைய அருளைப் பற்றி நினைக்கத் தொடங் கும். இந்தப் பயிற்சியில் ஈடுபட ஈடுபட மனம் தூய்மை அடைகிறது, சத்துவமயமாகிறது. மனம் நினைக்கப்படும் பொருளின் மீது நிலை பெற்று விடுகிறது, ஒன்றி விடுகிறது. தாரணை யின் முதிர்ச்சி தியானத்தில் கொண்டு விடு கின்றது.


தியானமாவது உள்முகப் பயிற்சியாகும். மனமும் சித்தமும் வெளிச் செல்லாமல் இருக்க வேண்டும். பழைய பழக்கங்கள் நீங்கி விட வேண்டும். ஐம்பூதங்கள், ஐம்புலன்கள், நான்கு அந்தக்கரணங்கள் போன்றவற்றை பயன்படுத் வதை குறைத்துக் கொண்டு உள்முகமாக திருப்பிக் கொள்ள வேண்டும். அதுமட்டும் போதாது. இந்தத் தியானம் இறைவனைப் பற்றிய தியானமாக இருக்க வேண்டும். அதற்கு இறைவனுடைய அருளும் தேவை. உயிர்களுக்கு எப்பொழுதுமே துணையாக இருந்து வரும் சிவபெரம்பொருள் தன்னையே தியானித்துக் கிடக்கும் பக்குவ நிலையை உண் டாக்கும். மேலும் அந்தத் தியானத்திற்கான ஆற்றலையும் வழங்கும். இறைவனுடைய திருமேனி குருவின்கண் தங்கும் என்பது திரு மூலருடைய உபதேசமாகும். ஆகவே, யோகம் செய்ய விரும்புபவர்கள் குருவின் உருவத் தியா னத்தினை இதயத்தில் வைத்துச் செய்ய வேண் டும் என்று திருமூலர் கூறுவார்.

''உருவாய சத்தி பரத்தியான முன்னுங்
குருவார் சிவத்தியானம் யோகத்தின் கூறே''

(திருமந்திரம்..598)

(தொடரும்)

# கந்தவேள் கருணை



டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

[44]

சிங்கமுகன் முருகப் பெருமானிடம் மேலும் வாதிடுகிறான்.

''எங்களுக்குப் பகைவர்கள் தேவர்கள். அந்தத் தேவர்கள் கூட்டத்தில் நீயும் ஒருவன் என்றால், அவர்கள் சார்பில் நீ வரலாம். ஆனால் நீ இந்தத் தேவர்கள் கூட்டத்தில் ஒருவன் அல்லவே? நீ விருப்பு வெறுப்பு இல்லாத சுவாமி என்கிறார்களே! நீ ஏன் போருக்கு வந்தாய்? கைலாயத்திலுள்ள சிவபெருமான் மீது கடுகளவும் எங்களுக்குப் பகைமை இல்லையே? எமதாற்றல் அவர் தந்ததேயன்றோ? அப்படியிருக்க, அவரது மைந்தனாகிய நீ எம்முடன் போருக்கு வந்த காரணம் யாது?'' என்று கேட்டான் சிங்கமுகாசுரன்.'' அவனது கேள்வியில் நியாயம் இருக்கிறது.

சுவாமி அதற்கு என்ன விடை சொல்கிறார்?

''உறைதரும் அளியன் தன்னை வலியவன்
முறைகெழு தண்ட மாற்றி ஒறுக்கின்நாடி
அண்டங்கள் முழுவ துக்கும்
இறையினைப் புரிதும் அற்றால் நீவிர்கள்
இமையோர்க் கிட்ட
சிறையினை அகற்ற வந்தோம் செருவுமத்
திறத்துக் கென்றான்''.

கந்தப் பெருமான் சிங்கமுகாசுரனுக்கு இந்த நீதியைத்தான் சொன்னார். ''சிங்கமுகாசுரனே! நீங்கள் பரம சாதுக்களான தேவர்களுக்குத் துன்பம் செய்தபடியினால் இந்தப் போர் வந்திருக்கிறது. எளியவரை வலியவர் ஒறுத்தால் வலியவரை நீதி முறைப்படி தண்டித்து அறத்தை நிலைநிறுத்த வந்திருக்கிறோம்'' என்று அருளினார்.

முருகவேள் கூறியதைக் கேட்ட சிங்கமுகாசுரன் சிரித்தான். போர்க்களம் செய்த சதி அது. சிங்கமுகனும் நீதி உணர்விழந்தான். ''தேவர்கள் ஏமாற்றமுற்றார்கள். அவர்கள் எங்கள் மீது நேரடியாகப் போர் செய்ய முடியாது. அப்படிப் பட்டவர்கள் எங்களுடன் போர் செய்ய சிவபெருமானை அழைத்து வந்திருக்கலாம். அவரை அழைத்து வந்திருந்தால் எங்களுக்கு எவ்வளவோ கௌரமாக இருந்திருக்கும். நீ சிறு குழந்தை. உன்னைக் கொன்றுவிட்டால் உமாதேவியார் வருத்தப்படுவார்கள். எனவே, உன்னைக் கொல்ல விரும்பவில்லை. நீ போய் விளையாடிக் கொண்டிரு'' என்றான்.

குகப் பெருமான் வாயால் மறுமொழி சொல்லவில்லை. அநாயாசமாக ஒரு பாணத்தை விடுத்தார். பெரிய மலைபோன்ற வடிவம் கொண்டிருந்த சிங்கமுகாசுரன் மார்பில் அப்பாணம் புகுந்து முதுகில் ஊடுருவிச் சென்றது. உதிர வெள்ளம் பெருகியது. ஒரு விநாடி முன் இறுமாப்புடன் பேசிய அவுணன் பெருந்துன்படைந்து கலங்கினான். பாணம் ஊடுருவிச் சென்றதால், மார்பும் முதுகும் வாயில்களைப் போல் பிளக்க, அவனது வயிற்றில் அடக்கமாயிருந்த பூதவீரர்கள் அவ்வழியே குதித்து வெளிப்பட முயன்றனர். சிங்கமுகாசுரன், அவர்கள் வழியைப் பத்துக் கைகளால் மூடிக்கொண்டு கந்தவேள் மீது ஒரு தண்டத்தை எடுத்து வீசினான். முருகக் கடவுள் நொடிப் பொழுதில் நான்கு பாணங்களால் அவன் நெற்றியைத் தொளைத்தார். சிங்கமுகாசுரன் மூர்ச்சித்தான். தனது மார்பில் தோன்றிய வாயிலை அடைத்து கொண்டிருந்த அவனது கரங்கள் நழுவின. உடனே பூதர்கள் அனைவரும் வெளிப்பட்டு முருகவேளைச் சூழ்ந்து கொண்டனர். திருவருள் இருக்க இறந்த பூதர்கள் உய்ந்ததில் அதிசயமென்ன?

மாயப் படையால் உதயகிரியில் அடைக்கப்பட்டிருந்த வீரவாகு தேவரையும், மற்ற படைத் தலைவர்களையும் அழைக்க வேண்டும் என்று திருவுளம் கொண்ட முருகப் பெருமான் மீண்டும் ஒரு பாணத்தை ஏவினார். அந்தப் பாணம் உதயகிரியில் சென்று மாயா பாசத்தை அறுத்து, வீரவாகு தேவர் முதலியோர்க்கு உணர்வு தந்து, புட்பக விமானம் போலாகி அவர்களை ஏற்றிக் கொண்டு வந்து முருகவேள் திருமுன் விடுத்தது. எல்லோரும் இளம் பூரணரது திருவடிகளை வணங்கி வாழ்த்தினார்கள். மறைந்தவர் யாவரும் வருவது கண்டு சிங்கமுகன் ஆசாபங்கமும் ஆத்திரமும் கொண்டான்.

இதற்குள் குமாரக் கடவுளின் நாணொலி கேட்டுச் சோர்வுற்று மயங்கி விழுந்த அவுண சேனைகள் மயக்கம் தெளிந்து விரைந்து போர் புரிய வந்தனர். அவர்கள் கோபத்துடன் படைக்கலங்களை வீசிக் கொண்டு முருகப் பெருமானைச் சூழ்ந்து கொண்டனர். குமர வேள் புன்முறுவல் பூத்துக் கோடி கோடி பாணங்களை விடுத்தார். அவர் விடுத்தபாணங் களில் சில அக்கினியை யொத்தன; சில நஞ்சை யொத்தன; சில இருளையொத்தன; சில பாம்புகளை யொத்தன; சில கூற்றுவனை யொத்தன; சில சூலத்தை யொத்தன; சில அறத்தை நிறுவியதால் பிரமதேவரை யொத் தன; சில உலகங்களைரட்சித்ததால் திருமாலை யொத்தன; சில அவுணர்களை அழித்ததால் உருத்திரனை யொத்தன.

''அறத்தை நல்குலின் அந்தணன் போல்வன;
அகிலத்
திறத்தை அன்பொடு போற்றலில்
செங்கண்மால் போல்வ
ஒறுத்து மன்னுயிர் உண்குறும் அவுணரை
ஒருங்கே
இறுத்தல் செய்திடும் தன்மையால் ஈசனே
போல்வ.''

முருகவேள் விடுத்த அனந்தகோடி பாணங்கள் கணப்பொழுதுக்குள் அவுண சேனைகள் அனைத்தையும் அழித்தன. சிங்க முகாசுரன் தனித்தவனாயினான். அவன் முன்பு கொண்டிருந்த மாயவடிவம் முருகவேளின் பாணத்தினால் அழிந்தது. ஆகவே, பழைய வடிவத்துடன் தேரின் மேல் நின்றான்.

தன்னுடைய படைக்கலன்கள் முருகப் பெருமானிடம் பயனற்றுப் போனதைக் கண்ட சிங்கமுகாசுரன் இரண்டாயிரம் கைகளாலும் கந்தவேளைப் பிடித்து விடலாம் என்று கோபத் துடன் பாய்ந்து வந்தான். அந்தக் கரங்களை யெல்லாம் கணைகளால் அறுத்துத் தள்ளினார் சுவாமி. வெட்டுண்ட அந்தக் கரங்கள் தரை யில் விழுவதற்கு முன்பே வேறு கரங்கள் முளைத்தன. நிலத்தில் விழுந்த கைகளை முளைத்த கைகளால் எடுத்துக் கொண்டு போருக்கு வந்தான் சிங்கமுகாசுரன். பெருமான் அவனது ஆயிரம் தலைகளையும், இரண்டா யிரம் கரங்களையும் அறுத்தார். அவை மீண்டும் மீண்டும் முளைத்தன. இப்படியாக முருகப் பெருமான் சிரங்களையும் கரங்களையும் அறுக்க அறுக்க அவை முளைத்துக் கொண்டே யிருந்தன. ''சிங்க முகன் யாகாக்கினியில் சிரங் களை அறுத்து ஆகுதி செய்த பலனால் தான் அறுந்த சிரங்களும் கரங்களும் மீண்டும் மீண்டும் முளைக்கின்றன'' என்று முருகப் பெருமான் எண்ணினார்.

''சிங்கமுகனே! இவ்வளவு, நேரம் உன் னுடன் நான் போர் செய்ததாக நினைக் கிறாயா? எனது தந்தை உனக்கு அளித்த வரங்களின் பெருமையைத் தேவர்களுக்குக் காட்டினேன். அவ்வளவுதான், அப்பனே! இது காறும் விளையாடினேன். இனிச் சமர்புரி வோம்'' என்றார் முருகப்பெருமான்.

கந்தவேள் கூறியதைக் கேட்ட சிங்கமுகா சுரன் இடிபோல் ஆர்த்தான். மலைகளைப் பெயர்த்து வீசினான். அந்த மலைகளைத் தூள் தூளாக்கிய சுவாமி அவனது மார்பில் ஆயிரம் பாணங்களைச் செலுத்தினார். அதனால் அவனது மார்பு பிளந்தது.

ஷண்முகநாதன் கூறுவார்; 'சிங்கமுகனே! இப்பொழுது ஒரு பாணம் விடுகிறேன். உன் சிரங்களும் கரங்களும் முளைக்கின்றனவா என்று பார்'' என்று ஓர் அஸ்திரம் விடுத்தார். அந்த அஸ்திரம் ஒருதலையும் இரு கைகளும் தவிர ஏனைய சிரங்களையும் கரங்களையும் ஒரே வீச்சில் அறுத்துத் தள்ளியது. சிங்கமுகா சுரனின் வெட்டுண்ட தலைகளும் கைகளும் தவிர ஏனைய சிரங்களையும் கரங்களையும் ஒரே வீச்சில் அறுத்துத் தள்ளியது. சிங்கமுகா சுரனின் வெட்டுண்ட தலைகளும் கைகளும் மீண்டும் முளைக்க ஆரம்பித்ததைக் கண்ட பெருமான், ''ஊம்'' என்று ஒலி எழுப்ப, அவை அக்கணமே உள்ளே புகுந்து ஒளிந்தன.

''சிவபெருமான் தந்த வரத்தை மாற்றி விட்டார் முருகன். அதை யார் எதிர்க்க முடியும்? சிவன் வேறு முருகன் வேறு அல்ல. இனி முருகன் நம்மைக் கொன்று விடுவார்.'' என்று முடிவு செய்து கொண்டான் சிங்கமுகன்.

''முருகா! நீ வேல் ஒன்றை மட்டும் வைத் துக் கொண்டு என்னைக் கொல்ல நினைக் கிறாய். வேலைத் தவிர வேறு ஆயுதத்தினால் என்னைக் கொல்ல முடியுமா?'' என்று கேட் டான் சிங்கமுகாசுரன். அவர் புல்லை ஏவினா லும் புவனம் முழுதும் அழிந்துவிடும் என்பதை மறந்து பேசினான்.

சுவாமியின் வலது கையில் குலிசாயுதம் இருந்தது. இடக்கையில் இருப்பது வேலாகிய சத்தியாயுதம். அந்தக் குலிசாயுதத்தைப் பிர யோகம் செய்தார். அவ்வாயுதம் விரைந்து சென்று புஜபல பராக்கிரமனும், அறிவாளியா யிருந்தும் அறிவை உறவுக்காக முறித்துக் கொண்டவனுமான சிங்கமுகாசுரனைப் பூப் பறிப்பது போல் வெகுவாகக் கொன்றது. கங்கையில் நீராடி அசுர ரத்தத்தின் மாசு களைக் களைந்து, கந்தன் கைக்குத் திரும்பி வந்தது.

பிரமாதி தேவர்கள் ஆரவாரம் செய்து ஆனந்தக் கூத்தாடினர்; பூ மழை பொழிந்த னர்.

சிங்கமுகாசுரன் இறக்கவில்லை. அவனை இறக்கச் செய்வது கருணாமூர்த்தியின் கருத் தல்ல. அவனைத் திருத்துவதே அவரது திருத் தொழில். சிங்கமுகாசுரனை சிம்ம வாகனமாக பராசக்திக்குத் தொண்டு செய்ய அனுப்பி வைத்தார் சுவாமி. தேவிக்கு என்றுமே கர்ம ஸ்வரூபமான சிம்ம வாகனமுண்டு. அதனுள் சிங்கமுகனும் ஐக்கியமாகி அம்பிகையின் திவ்விய ஸ்பரிசத்தைப் பெற்றான் என்பதே கருத்து. வதம் செய்தாலும் அது இதமாக முடிவதை நம் புராணங்களில்தான் காணலாம்.



முருகப் பெருமான் அனைவருக்கும் அருள்செய்து வீரவாகு தேவரோடும் பாசறை திரும்பிப் பொற்பீடத்தில் எழுந்தருளினார்.

சிங்கமுகாசுரன் அழிந்த செய்தி கேட்ட சூரபன்மன் அலமந்து போய்விட்டான். ''ஆ! இரு சிறகுகளாயிருந்த தாரகன், சிங்கமுகன இருவரையும் இழந்து சிறகொடிந்த பறவை யாகிவிட்டேனே! தந்தையும் தாயும் தமரு மாய் இருந்த சிங்கமுகன் போய் விட்டபின் எனக்கு என்ன வாழ்வு வேண்டியிருக்கிறது? இனி வெற்றிக்காக நான் போராட வேண்டிய தில்லை. நானும் போர்க்களத்தில் மடிந்து உன்னைச் சேரவேதான் சண்டையிட வேண்டும் என்று கூறிப் புலம்பினான். அருமை மகன் பானுகோபன் மாண்டபோது அலறியதைவிட உணர்ச்சியுடன் தம்பிக்காகக் கதறினான்.

''பொன்னை நிலந்தன்னைப் புதல்வர்களை மங்கையரை
பின்னையுளபொருளை யெல்லாம் பெறலாகும்
என்னை யுடையஇளங் கோவே இப்பிறப்பில்
உன்னை இனிப்பெறுவதுண்டோ உரையாயே''

ஒருவன் பெரு நிதியத்தை இழந்துவிட்டா லும் பிற்பாடு சம்பாதித்துக் கொள்ளலாம். குழந்தை ஒன்று தவறிவிட்டாலும் பகவான் கிருபை புரிந்தால் இன்னொரு குழந்தையைக் கொடுப்பார். மனைவி மறைந்தாலும் மறு மணம் செய்து கொள்ளலாம். ஆனால் தம்பி யின் இழப்புக்கு இட்டு நிரப்ப எது உண்டு? சகோதர பாசத்தினால் சூரபன்பன் ஆயிரத் தெட்டு அண்டங்களும் அதிருமாறு கதறியழு தான்.

இனிக் கதறுவதற்கில்லை என்ற நிலையில் சுற்றமனைத்தையும் போரில் காவு தந்த சூர பன்மன் தானும் குமரக்கடவுளுடன் சமரம் புரிவதற்கு எண்ணினான்.

ஆயிரங்கோடி ஒற்றர்களை அழைத்தான். ''ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள சேனை யாவற்றையும் விரைவில் திரட்டிக் கொண்டு வாருங்கள்'' என்று ஆணையிட்டான்.

சூரபன்மனின் ஆணைப்படி ஒற்றர்கள் ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும் சென்று சேனைகளைத் திரட்டிக் கொண்டு வந்தார்கள். அச்சேனைகள் உலகங்களெல்லாம் நடுங்க வந்து கூடின.

அச்சேனைகளின் பெருக்கம், முன்னொரு கால் திருமால் பிரமனோடு பகை கொண்டு உலகிலுள்ள உயிர்களை உண்ண அவ்வுயிர்கள் பின்பு திருமாலுடைய உந்திக் கமலத்தில் வழியே தோன்றி வந்ததையும், ஐம்பெரும் பூதங்களும் உயிர்க் கூட்டங்களும் புவனங்களும் வேதாகமங்களும் பிறவும் தொடக்கப்படைப்பு காலத்திலேயே சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளினின்றும் தோன்றி வந்ததையும் போன்றதாகும்.

''முந்தை அண்டத்தின் நெறிதனில் முழங்கிருஞ்சேனை
வந்து வந்திவட் செறிவன விதியொடு மாறாய்ச்
சுந்த ரங்கெழு மாயன்இவ் வுலகுயிர் துய்ப்ப
உந்தி யின்வழி அங்கவை தோன்றுமா றொப்ப''

''பூதம் யாவையும் உயிர்களும் புவனமுள் ளனவும்
பேதம் நீங்கிய சுருதியா கமங்களும் பிறவும்
ஆதிகாலத்தின் அநாதியாம் எம்பிரான் அளப்பில்
பாத பங்கயத் துதிப்பவும் போன்றன பகரின்.''

சூரபன்மன் சிவ பூஜை செய்து ஆகாரம் உண்டான். நீறணிந்து, நறுமணம் பூசிக் கொண்டு பெரும் பொருளைத் தானமாக அள்ளி வீசினான், பின் போர்க்கோலம் பூண்டு, முன்யாகத்தில் தோன்றிய பெரிய தேரின்மீது ஏறிப் புறப்பட்டான். சிவப் படைக்கலம் முதலியவைகள் நிறைந்த ஆயிரம் கோடி தேவர்களும், சிங்க வாகனமும் இந்திர ஞாலத் தேரும் சூழ்ந்து வந்தன. பேரிகைகள் முழங்கின. எண்ணில்லாத சேனைகளுடன் சூரபன்மன் போர்க்களம் சேர்ந்தான். தமது இன்னலுக்கெல்லாம் காரணமான அவனைக் கண்ட இமையவர் இரத்தக் கண்ணீர் வடிய அரற்றினார்கள். இந்திரன் தான் உற்ற அவமானங்களையெல்லாம் எண்ணி வருந்தினான். நான்முகனும் அரக்கன் ஆணைக்குட்பட்டுத் தான் வாழ்ந்ததை நினைந்து மனம் விம்மினார். வீரரும் பூதரும் வெய்துயிர்த்தார்கள்.

மாலும் அயனும், மகபதியும் கந்தவேளிடம் வந்து வணங்கி, சூரபன்மன் போர்க்களம் வந்துள்ள செய்தியைத் தெரிவித்தார்கள். கந்தப்பெருமான் கடைக்கண் நோக்க, வாயு தேவன் மனோ வேகத் தேரைக் கொண்டு வந்து நிறுத்தினான். புத்தேளிர் பூமழை பொழிந்தனர்.

முருகனின் தலைமையில் முதன் முறையாக மகிழ்வுடன் போர்க்களம் எய்திய அமரர்கள் போர்க்களத்தை அடைந்ததும் எண்ணிறந்த அசுரர் படை கண்டு அயர்வு எய்தினர்.


''வரத்தினிற் பெரியர் மாய வன்மையிற் பெரியர் மொய்ம்பின்
உரத்தினிற் பெரியர் வெம்போர் ஊக்கத்திற் பெரியர் எண்ணில்
சிரத்தினிற் பெரியர் சீற்றச் செய்கையிற் பெரியர் தாங்கும்
கரத்தினிற் பெரியர் யாரும் காலனிற் பெரியர் அம்மா.''

''ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் உள்ள அவுண சேனைகள் அனைத்தும் இன்று வந்து விட்டன. இவர்கள் கடல்களைப் பருகுவர், வடவைத் தீயினும் கொடியவர்; மேரு மலையைப் பந்தாடுவர்; சண்டமாருதத்தின் எதிரே பஞ்சுபோல் இவர்கள்முன் நாம் அழிவோம். எங்கும் அசுரர்களாயிருப்பதால் ஓடி ஒளிவதற்கும் இடமில்லை. இவர்களுடன் போர் புரிந்து அழிவது உறுதி'' என்றே பூதவீரர்கள் எண்ணத் தொடங்கிவிட்டனர். துன்பம் வந்தால்தான் தெய்வ நம்பிக்கை மிகவும் பெருகும்; அதே போல் துன்ப காலத்தில் தான் அது மிகவும் தளரவும் செய்யும். பிற்பாடு துன்பம் தீர்ந்த பின் தேவர்களின் பக்தி முறுகி முதிர்வதற்கெனவே இப்போது சிறிது தளர்ச்சி கண்டது. முருகவேள் தம் தரப்பில் தலைமை தாங்குவதையும் அவர்கள் மறந்து அச்சத்துக்காட்பட்டனர்.

இந்திரன் நடுங்கிக்கொண்டே திருமாலிடம் வந்தான். ''சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள அசுர வீரர்களுடன் ஆறுமுகக் கடவுள்மீது போர் செய்ய வந்து விட்டான. சூரனுடைய படைகளை அழிக்கவே ஊழிக்காலம் சென்றுவிடும். அவ்வாறாயின் சூரன் மாள்வது என்று? நான் பொன்னுலகம் ஆள்வது என்று?'' என்று முறையிட்டான்.

(தொடரும்).

# வாசகர்



# எண்ணங்கள்

திருக்கோயில் தங்கள் அரவணைப்பில் கோபுரம் போல் வளர்ந்து வருகிறது; நற்கருப்பஞ்சாற்றிலே தேன் கலந்து கொடுப்பதைப் போல உள்ளது. கட்டுரைகளில் எதைப் புகழ்வது, எதைவிடுவது எனத் தெரியாமல் தவிக்கின்றேன். அத்தனையும் இனிக்கின்றன. திருமந்திரச் செம்மலின் திருமந்திரம் தேவாமிர்தமாகத் தித்திக்கிறது. இது வெறும் புகழ்ச்சியல்ல. உண்மை.

—டி. ஐ. முத்துசாமி;
செவ்வாய் பேட்டை,
சேலம்—636 002.

சமயச் சான்றோர்களின் பழுத்த அனுபவமிக்க இனிய கட்டுரைகள் ''திருக்கோயிலை'' அலங்கரிக்கின்றன. மிக நல்ல முறையில ''திருக்கோயில்'' இதழைத் கொணரும் அறநிலையத்துறைக்கு அடியேனுடைய நன்றியை என்றென்றும் உரித்தாக்குகிறேன்.

—சுத்தசத்வானந்தா,
சென்னை-28.


சித்திரபாரதம்
கதை வடிவம்: செவ்வேள்
படம்: M.N.ராஜா
பாசுபதாஸ்திரம் பெற்ற அர்ச்சுனனை வாழ்த்தித் தன் தேரில் ஏற்றித் தேவலோகத்திற்கு அழைத்து வருகிறான் தேவேந்திரன். இரத்தினசிம்மாசனத்தில் தன்னுடன் அர்ச்சுனனைச் சரிசமமாய் அமரவைத்தும், தேவாமிர்தம் அளித்தும் பெருமைப் படுத்துகிறான் தேவேந்திரன்.
திருமகளை நிகர்க்கும் பேரழகி ஊர்வசி நாட்டியம் ஆட, அவள் நாட்டியம் கண்டு களிபேருவகை அடைகிறான் அர்ச்சுனன்.
ஆஹா! அற்புதம். அற்புதம்! இதுபோன்ற நாட்டியம் நான் இது வரை கண்டதேயில்லை.
விருந்தினர் மாளிகையில் அர்ச்சுனன் தனித்திருக்கும் இரவு வேளையில் அவனைத்தேடி வருகிறாள் ஊர்வசி.
வரவேண்டும் தாயே! வரவேண்டும்! என் தந்தை இந்திரனின் அபிமானதேவி நீங்கள் என்னை ஆசீர்வதித்தால் நான் அகமகிழ்வேன்.
ஆத்திரம் கொள்ளும் ஊர்வசி அர்ச்சுனனைச் சபிக்கிறாள்.
தழுவி மகிழ்ந்திருக்க வந்த என்னைத் தாயெனக் கூறி நிந்தை செய்த நீ பேடியாக மாறக் கடவாய்!
பேடிபோல் தோற்றம் மாறிப்போகும் அர்ச்சுனன், பொழுது விடிந்தும் தன் மாளிகைக்கு உள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறான்


இந்திரன் அர்ச்சுனன் உற்ற சாபம் அறிந்து வருந்துகிறான்.
ஊர்வசி! உன் சாபத்தை நீயே மாற்றி அருள் செய்.
அர்ச்சுனா! நீ எப்போது தேவை என நினைக்கிறாயோ அப்போது மாத்திரம் உன் தோற்றம் பேடியாக மாறும்.
மிக்க மகிழ்ச்சி
மன் மதனை நிகர்க்கும் ஆணழகன் அர்ச்சுனனுக்குக் கற்பக மாலையும், பிரமன் அளித்த நவரத்தின கிரீடமும் அணிவித்து தேவர்களின் இளவரசன் ஆக்குகிறான் தேவேந்திரன்.
மூன்றுலகமும் காணா மாவீரனே! எனக்கொரு வரம் தரவேண்டும் நீ
கடல் நீரின் இடையே, தோயமாபுரம் என்னும் நாட்டில், நிவாத கவசர் எனும் மூன்று கோடி அரக்கர்கள் வாழ்கிறார்கள்.
திருமால், முருகர், சிவபெருமானாலும் அவர்களை வெல்ல முடியவில்லை. தம் மூச்சுக் காற்றால் மூவுலகையும் நடுங்கவைக்கும் அந்த அரக்கர்களை நீதான் சென்று வென்று வரவேண்டும்.
அப்படியே செய்கிறேன் தந்தையே! ஆசி கூறுங்கள்.
வெற்றி உனக்கே! இராவண வதத்திற்காக இராமனுக்கு நான் அளித்த தேர் இது. இதில் புறப்பட்டுச் செல்.
பதினாயிரம் குதிரைகள் பூட்டிய தேரை மாதலி செலுத்த, தனி ஒருவனாய் நிவாத கவசரை வெற்றிக் கொள்ள, கடலுக்குள் செல்கிறான் அர்ச்சுனன்.

# ஸ்ரீ வராக அவதாரம்

ஜெயஸ்ரீ மூகாம்பிகை

திருமால் நிகழ்த்திய திருவவதாரங்களில் மூன்று அவதாரங்களுக்கு அடிப்படைக் காரணம் ஒன்றேயாக அமைந்துள்ளது. அது, தவறு செய்து, தண்டனையை அனுபவிக்கத் தரணியில் தோன்றிய தன் காவலருக்காகத் தானும் தரணிக்கு வந்தார். தகைசால் அத்திரு அவதாரங்கள், அருமையான தத்துவங்களை-தர்மங்களைப் புகட்டும் அவதாரங்கள்; அறியாமை இருளைப் போக்கி, நம் ஆன்மாவிற்கு வழிகாட்டும் ஒளி விளக்குகள்; பார்மகள் மீது கொண்ட பரிவில் - பார்மக்கள்மீது கொண்ட பரிவில் யக்ஞரூபமாக எடுத்த ஸ்ரீவராக மூர்த்தியின் அவதாரம் தசஅவதாரங்களில் மூன்றாவதாகும்.

பிரம்மதேவரின் மானசமைந்தர் மரீசி மகரிஷி. மரீசியின் மகன் கஸ்யபர் என்ற முனிவர்; மிகவும் மேன்மை பொருந்தியவர். சத்துவ குணம் நிறைந்த உத்தமர். தட்சப் பிரஜாபதி தன் பதின்மூன்றுபெண்களை கஸ்யபருக்குத் திருமணம் செய்து கொடுத்தார். அவர்களில் ஒருத்தி திதி என்பவள். இவள் ஒருநாள் மாலை காமன் கணைக்கு இலக்காகி, தனக்கொரு குழந்தையைக் கோரி கஸ்யபரை நெருங்கினாள். அப்போது தழல் வளர்த்து, சந்தியா கால சடங்குகளைச் செய்து கொண்டிருந்தார் அவர். மனைவியின் மனநிலை புரிந்து, தருணம் தக்கதல்ல என்று அறிவுறுத்தினார். இரவும் பகலும் சந்திக்கும் இக்காலம், முக்கண்ணர் நடமிடும் பிரதோஷ காலம்; வழிபாட்டுக்கு மாத்திரமே உரியது-என்று எடுத்து விளக்கினார்.

அதை ஏற்கும் நிலையில் திதி இருக்கவில்லை. வேறு வழியின்றி தனக்கொரு மகவை வேண்டி நிற்கும் அவளுக்கு அப்பேற்றினை அளித்தார். ஆனால் அதன் பிறகு திதியினை நோக்கி, ''பக்தியற்றவளே! உன் உள்ளம் அடக்கத்தைத் துறந்து அசுத்தமாகிப் போன காரணத்தினாலும் கணவன் கட்டளையை மீறிய காரணத்தாலும், மகாதேவரின், மற்ற தேவர்களின் கோபத்திற்கு நீ ஆளான காரணத்தாலும் கொடிய குழந்தைகள் இருவரைப் பெறுவாய்; அவர்கள் மூவுலகையும் துயருறச் செய்பவர்களாகவும் இருப்பார்கள். சான்றோர்கள் கோபத்திற்கு ஆளாவார்கள். இறுதியில் இறைவன் அவதாரம் செய்து இவர்களைக் கொல்வார்'' என்றார்.

கணவரின் சாபமொழிகளைக் கேட்டு, தன் வேகம் அடங்கி விவேகம் தலை தூக்கிய பிறகு திதி தன் செயலுக்காக மிகவும் வருந்தினாள். கஸ்யபர் பாதங்களைப்பற்றிக்கொண்டு தன்னை மன்னிக்க வேண்டினாள். கொடியோரைப் பெறும் கேவல நிலையிலிருந்து தனக்கு மீட்சி நல்குமாறு மன்றாடினாள்.

கஸ்யபருக்கு இரக்கம் ஏற்பட்டது. 'பெண்ணே! பாவம் செய்பவர், யாராக இருந்தாலும் அதன் பலனை அனுபவித்தேயாக வேண்டும். உனக்குப் பிறக்கும் பிள்ளைகளில் ஒருவனான ஹிரண்யகசிபுவிற்கு பிரகலாதன் என்ற பரமபாகவதக் குழந்தை பிறப்பான்'' என்றார்.

திதியும், தன் மக்கள் தீயவர்களானாலும் ஆண்டவன் கரத்தால் மடிவார்களாதலால் நற்பேறு பெறுவார்கள் என்றெண்ணிச் சமாதானமடைந்தாள். மேலும் தன் பேரக்குழந்தை உத்தமனாகப் பிறக்கப் போவதால் கீர்த்தி ஏற்படும் என்று மகிழவும் செய்தாள்.

திதி கருவுற்றாள். நூறு வருடங்கள் கடந்தன. ஆதவன் ஒளி மங்கிப் போனது. திக்பாலர்கள் (திசைகளுக்கு அதிகாரிகள்) ஆற்றல் குறைந்தது. எங்கும் இருள் சூழ்ந்தது. திக்பாலர்களும், தேவர்களும் நான்முகனைச் சென்று பணிந்தார்கள்.

''பெருமானே! எங்கும் நிறைந்த இருளில் நாங்கள் அச்சத்தின் வசப்பட்டு இருக்கிறோம். இரவு பகல் வேறுபாடு தெரியாத காரணத்தால் மாந்தர் தத்தம் கடமைகளை இயற்ற இயலாது தவிக்கின்றனர்''- என்று முறையிட்டார்கள்.

பிரம்மாவும் திதியின் வயிற்றில் வளரும் கருவின் ஆற்றலால் அகிலம் ஒளியிழந்தது என்று கூறி, அதன் காரணத்தை விளக்கத் தொடங்கினார்.

முன்னர் ஒருமுறை பிரம்மா மனதில் நினைத்தவுடன் நான்கு புத்திரர்கள் தோன்றினார்கள். அவர்களே சனகர், சனந்தர், சனாதனர், சனற்குமாரர் என்ற நான்கு மகரிஷிகள். காலங்கள் கடந்தன. அவர்கள் மிகமிக வயதில் முதிர்ந்தவர்களானார்கள். இருப்பினும் என்றும் ஐந்து வயதுத் தோற்றமுடையவர்கள், ஞானிகளான அவர்கள் ஆடையைக்கூடத் துறந்த பற்றற்றவர்கள். சிவபெருமான் ஆலமரத்தடியில் தட்சிணா மூர்த்தித் திருக்கோலத்துடன் அமர்ந்து மௌனமாகவே உபதேசித்த உத்தம சீடர்கள்; பிரம்மஞானிகள்.

''கல்லாலின் புடையமர்ந்து நான்மறை ஆறு
அங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்!''

இத்தகு முனிவரர்கள் நால்வரும் திருமாலைத் தரிசிக்க வேண்டி, வைகுண்டத்தை அடைந்தார்கள்; ஆறுவாயில்களை கடந்து ஏழாவது வாயிலை அடைந்தார்கள். அங்கே ஜயன், விஜயன் என்ற இருவர் காவலராக இருந்தனர். இவர்கள் கர்த்தமர் என்ற முனிவரின் மைந்தர்கள். மருத்தன் என்ற வேந்தன் ஒரு வேள்வி செய்தான். அதில் இவர்களுக்கு மிக அதிகமான தட்சிணை கிடைத்தது. அதை பங்கிட்டுக் கொள்வதில் இருவருக்கும் மன வேறுபாடு ஏற்பட்டது; பாசம் மறைந்தது; பணம் வென்றது; சண்டை முற்றியது; ஒருவரையொருவர் யானையாகவும் முதலையாகவும் சபித்துக் கொண்டனர். அவ்வாறே யானையாகவும் முதலையாகவும்பிறந்தனர். முன்வினை தொடர்ந்தது. இரண்டுக்குமிடையே போர் நடந்தது. யானை 'ஆதிமூலமே' என்று அலறியது. திருமால் தோன்றி சக்ராயுதத்தால் முதலையைக் கொன்றார். இருவரும் அவ்வுடலைவிட்டுப் பின் பெருமானுக்கே வாயிற் காவலரானார்கள்.

ஜயவிஜயர்கள் என்ற அவ்வாயில் காவலர்கள் வருகின்ற முனிவர்களை கவனித்துப் பார்த்தார்கள். சனகாதி முனிவர்களோ, மனதில் மாலவனையே தியானித்தவர்களாக, கண்ணால் காணும் காதல் வேட்கை மீதூற, காவலரைக் கவனியாது வாயிலைக் கடக்க முயன்றனர். ஜயவிஜயர்கள், தங்களை மதியாது செல்லும் மாமுனிவர்களை கரத்தில் ஏந்தியிருந்த கதையால் தடுத்தனர். அச்செயலால் மகரிஷிகள் சீற்றம் கொண்டனர்.

'பன்னெடுங்காலம் பரமனை மனத்தில் இருத்தி, பரமபத காவலராகியுள்ள நீங்கள், ஏன் மனதில் பேதபுத்தி கொண்டுள்ளீர்கள். சத்துவ குணத்தை மறந்த நீங்கள், காமம், கோபம், லோபம் முதலியன நிறைந்த அசுரப் பிறவி அடைவீர்கள்!'— என்று சபித்தனர்.

ஜய விஜயர்கள் விதிர்விதிர்த்து முனிவர்களின் திருப்பாதங்களைப் பற்றிக் கொண்டு கதறினர். 'பேரருளாளர்களே! நாங்கள் செய்த தவறுக்குத்தக்க தண்டனைதான் இது. ஆனால் தயா மூர்த்திகளான தாங்கள் இரக்கம் காட்ட வேண்டும். தங்கள் சாபத்தால் நாங்கள் கீழுலகம் சென்றாலும், பரமனை எப்போதும் மறவாதிருக்க வேண்டும்'-என்று வேண்டினர்.

அணுவிற்குள் அணுவாய் இருந்து அண்டங்கள் அனைத்தையும் படைத்துக் காக்கின்ற திருமால் இத்தருணத்தில் திருமகளுடன் அங்கு எழுந்தருளினார். காதுகளில் மகர குண்டலங்கள் ஜொலிக்க, திருமுடியை அலங்கரித்த ரத்தின மகுடம் அதனோடு போட்டியிட்டுப் பிரகாசிக்க, மார்பில் முத்தாரங்களும், ரத்தின ஆபரணங்களும், கௌஸ்துபத்தைத் தொட்டு விளையாட, இடையிலிருந்தும் இழைந்து தழையும் பொன்னாடையை இறுகச் சுற்றிப் பற்றியிருந்த கச்சையின் மீது, கர கங்கணம் தொட்டு விளையாட, திருமாலின் திருக் கண்களினின்றும் பெருகிய குளிர்ந்த பார்வைப் பிரவாகம், சாபம் பெற்றவர்களையும், அளித்தவர்களையும் ஒரு சேர நீராட்ட இருதரப்



பினருமே இதயம் சிலிர்க்க கண்களில் நீர்மல்க, நாத்தழுதழுக்க வணங்கினார்கள்.

முனிவர்கள், "பெருமானே, தங்கள் பெருமையை எங்கள் தந்தையார் நான்முகர் நவில, எங்கள் இதயத்தில் தங்களை இருத்தி தியானித்தோம் இதுநாள்வரை; இப்போது நேரில் தரிசிக்கும் பெரும் பேறு பெற்றுய்ந்தோம். புருஷோத்தமா! எங்கள் செவிகள் எப்போதும் தங்கள் திருப்புகழைக் கேட்க வேண்டும். எங்கள் உள்ளங்களில் தங்கள் திருவுருவம் நீங்காது நிலைத்திருக்க வேண்டும்"- என்று துதித்துச் சொன்னார்கள்.

''மகரிஷிகளே! நீங்கள் தவச்சிரேஷ்டர்கள், என் வாயில் காவலர் உங்களை அவமதித்து விட்டார்கள். உங்களுக்கு நேர்ந்த அவமதிப்பு எனக்கு நேர்ந்ததேயாகும். வேலையாட்கள் குற்றம் செய்தால் அந்தப்பழி எஜமானனையே சாரும். பக்தர்கள் பால் பேரன்பு பூண்ட என் உள்ளத்தை அறியாமல் ஜயவிஜயர் தவறு செய்தனர். அதன் பலனை அனுபவித்தேயாக வேண்டும்''-என்றவர் ஜயவிஜயர்புறம் திரும்பினார்.'ஜயவிஜயர்களே!சாபம்மாற்றவியலாதது. ஆனால் ஒரு சலுகையளிக்கிறேன். என் பக்தர்களாக சதா என்னைத் துதித்துக் கொண்டிருக்கும் ஏழு பிறவிகளையாவது அல்லது என் எதிரிகளாக சதா என்னை துவேஷித்துக் கொண்டிருக்கிற மூன்று பிறவிகளையாவது நீங்கள் அடையலாம். எதை விரும்புகிறீர்கள்?'' என்று வினவினார்.

துயரம் எல்லை மீதுற நடுக்கத்தில் மனம் துடிக்க, உடல் பதற நின்ற அவர்கள் ''ஏழு

பிறவிகள் பன்னெடுங்காலமாகும். பரமனுக்குப் பகைவர்களே ஆனாலும் கூடப் பரவாயில்லை, மூன்று பிறவிகளை எடுத்து விரைவில் வைகுண்டம் வந்து, பரமனை அடைந்து விட வேண்டும்' என்று முடிவெடுத்தனர் அவர்கள்.

வைகுண்ட உலகில் நிகழ்ந்த இதை தேவர்களுக்குக் கூறிய பிரம்மதேவர், ''அந்த ஜய விஜயர்கள்தான் இப்போது திதியிடம் கர்ப்ப வாசம் செய்கிறார்கள்'' என்றார். தேவர்களும் சமாதானமடைந்தனர்.

ஒரு நாள் திதிக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. அப்போது பல அபசகுனங்கள் தோன்றின. பூகம்பம் ஏற்பட்டது. எரி கொள்ளிகள், இடிகள் வானிலிருந்தும் விழுந்தன. பெரும் புயல் ஏற்பட்டது; கடல் கொந்தளித்தது; நரிகளும் கோட்டான்களும் கூக்குர லிட்டன. நாய்கள் கழுதைகள் பெருங்குரலில் ஓலமிட்டன.

ஹிரண்யாட்சன், ஹிரண்யகசிபு என்று கஸ்யபமுனிவர் அக்குழந்தைகளுக்குப் பெயரிட்டார். இருவர்தம் ஆற்றல் அமோகமாக வளர, உருவால் அழகானவர்களாக, செயல்களால் பயங்கரமானவர்களாக வளர்ந்தனர். ஹிரண்யாட்சன் போர் செய்வதே கருத்தாகக் கொண்டு, கதாயுதத்தைக் கையில் ஏந்திக் கொண்டு சென்று, தன் பல பராக்ரமங்களால் மூவுலகையும் தன் வசமாக்கிக் கொண்டான். தேவர்களும், தேவேந்திரரும் பயந்து ஓடி ஒளிந்தனர். ஹிரண்யாட்சன் சொர்க்கத்தினின்றும் மீண்டுசமுத்திரத்தில் இறங்கி அதைக் கலக்கினான். நீர்வாழ் பிராணிகள் நிலை கலங்கி சிதறின. நிதானமில்லாமல், நீரில் கதையில் சுழற்றியடித்தபடி சஞ்சரித்தான். பிறகு வருணருடைய உலகை அடைந்தான். வருணதேவரைப் போருக்கு அழைத்தான். ஆனால் வருணர் இணங்கவில்லை. 'அசுரனே! ஆதியான ஆண்டவனைத் தவிர்த்து உன்னோடு வேறு ஒருவராலும் யுத்தம் செய்ய முடியாது!''-என்றார்.

இதுவரை அனைவரும் தன்னைக் கண்டு ஓடி ஒளிந்து பின்வாங்க, தன்னோடு போர் புரியவும் ஒருவர் இருக்கிறார் என்று வருணன் கூற ஹிரண்யாட்சன் மகிழ்ச்சி கொண்டான். நீரை விட்டு மேலே வந்தான். பூமியைத் தூக்கிக் கொண்டு மீண்டும் கடலில் புகுந்து சென்று அங்கே வைத்தான். பூமிக்கு நேர்ந்த நிலையை கண்டு தேவர்கள் மிரண்டனர். பூமியை மீட்க வேண்டி பிரம்மா திருமாலைத் துதித்தார். அப்போது அவர் நாசியினின்றும் ஒரு சிறு பன்றி வெளிப்பட்டது. பார்த்துக்கொண்டிருக்கும் போதே பெரும் அளவில் வளர்ந்தது. ஆகாயத்தில்நின்றது. நான்முகன் யோசித்தார். பன்றி உறுமியது. அதன் குரல் மூவுலகிலும் எதிரொலித்தது. பிரம்மா, பன்றியாக அவதரித்திருப்பது பரந்தாமனே என்று தெளிந்தார். சிலிர்த்துக் கொண்டிருந்த ரோமங்களால் மேகங்களைச் சிதறச் செய்த வண்ணம் வராக மாகிய பெருமான் நீரில் புகுந்தார்.

போர் செய்ய எவரும் கிட்டாமல் அலைந்து கொண்டிருந்த ஹிரண்யாட்சன் எதிரே நாரத முனிவர் சென்றார். 'ஹிரண்யாட்சா! நீ பூமியை வைத்திருக்கும் இடத்திலிருந்து திருமால் அதை அறிந்து எடுத்துச் செல்கிறார். போர் செய்ய உனக்குத் தக்கவர் அவரே!'' என்று கூறினார்.

உடன் அவ்வசுரன் மார்பில் கவசமணிந்து கையில் கதையைத் தாங்கி பொன்னாபரணங்கள்மின்ன, 'எங்கே அந்த நாராயணன்?' என்று சத்தமிட்டபடியே தேடிச் சென்றான்.

திருமால் நீரினடியில் இருந்த பூமியை வராக உருவோடு தனது பற்களின் மேல் பூமியைத் தூக்கிக் கொண்டு நிற்கும்போது ஹிரண்யாட்சன் கர்ஜித்தபடியே அவ்விடத்தை அடைந்தான். பகவானைப் பார்த்து, 'காட்டில் திரிய வேண்டிய மிருகம் இங்கு வந்திருக்கிறதே என்று கேலிசெய்தான். ''பூமியைக் கீழே வை'' என்று மிரட்டினான். பூதேவி பயந்தாள். இதைக் கண்டு வராக மூர்த்தியான பெருமான், ஹிரண்யாட்சனைப் பொருட்படுத்தாமல் வேகமாக நீரைக்கிழித்துக் கொண்டு வெளிப் போந்தார். அவன் பின்னாலேயே துரத்தி வந்தான். பகவான் பூமியை நீரின் மேல் பகுதியில் தக்க இடத்தில் வைத்து நிலைப்படுத்தினார். தன் கொம்பினால் ஹிரண்யாட்சன் மார்பினைப் பிளந்து சம்ஹாரம் செய்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.

இத்திருவவதாரச் சரிதத்தைப் பிள்ளைப் பெருமாளய்யங்கார், தாம் இயற்றிய திருவரங்கத்து மாலையில்,

''ஆருக்கிவரை யளவிடலாந்தென்னரங்கரிந்தப்
பாருக்கரந்தை தவிர்ப்பதற்காகப் பழிப்பில்
சீருற்றசெங்கட் கரும்பன்றியாகித் [பெருஞ்
திருக்குளம்பின்
மேருக்கண கணமாத் தலைநாளில்
வினோதிப்பரே!''


—என்று பூமிக்கு ஏற்பட்ட துன்பம் (அரந்தை) நீங்குவதற்காக தோன்றி அவதார நோக்கத்தையும், மேலும் கம்பர்

''கிளரகன் புனலுணினறரி யோர் கேழலாய்,
இளையெனுந் திருவினை யெய்தினானரோ
உளைவரும் பெருமையோரெயிற்றினுட்புரை
வளரிளம்பிறையிடை மறுவிற்றோன்றவே''

என்னும் பாடலில் வராகப்பெருமானின் திருப்பல்லினால் குத்தி எடுக்கப்பட்ட பூமி அதிலே, பிறையிடத்துக் களங்கம் போல மிகச் சிறியதாய் காணப்பட்டது என்று வராகப் பெருமானின் அளவிலாப் பேருருவத்தைப் போற்றிக் கூறுகிறார்.

ஆழ்வார்திகளும் வராக அவதாரப் பெருமையைப் பலவாறு போற்றுகின்றனர்.

வராகமூர்த்திப் பெருமான் பெண்ணாகிப் பொலிந்து நின்ற பூமகளை மணந்து பூவராக மூர்த்தியாக அருள்பாலித்து வருகிறார் என்றும் புராணம் கூறுகிறது.




டாக்டர் இரா. நாகசாமி (3)
தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் (ஓய்வு)

பண் : கௌசிகம்

செய்யனே! திருஆலவாய் மேவிய
ஐயனே! அஞ்சல் என்று அருள்செய் எனைப்
பொய்யராம் அமணர் கொளுவும் சுடர்
பையவே சென்று பாண்டியர்க்காகவே.

காட்சி 12

பாண்டியனை வெப்பு நோய் பற்றுகிறது. தாங்க ஒண்ணாது துடிக்கிறான். மங்கையர்க்கரசியும் வருந்துகிறாள். தனது நோயைத் தீர்க்க வல்லவர்களை அழைத்துவரச் சொல்கிறான். அரன் அடியைப் பரவும் ஞானசம்பந்தரை அழைக்கலாமோ என்று பயத்துடன் வினவுகிறாள். யாராயிருந்தாலும் அழைத்து வா என்கிறான் அரசன். குலச்சிறையாரை அனுப்பிச் சம்பந்தரை அழைக்கிறாள் மங்கையர்க்கரசி.

[வெப்புநோய் தாங்காது அரசன் துடித்தல்]

சுபபந்து வராளி—ஆதி

பல்லவி

வெந்தணலைப்போல் உடல்எல்லாம் எரிவதால்
ஆற்றகில்லேன் பெண்ணே!

சரணம்

வெப்பம் தவிர்க்கவல்ல வல்லவர் உள்ளாராகில்
விரைந்துநீ அழைத்திடுவாய்

[மங்கையர்க்கரசி சம்பந்தப் பிள்ளையை அழைக்கலாமோ என வினவல்.]

பெகாக்—ஆதி

தேவி:

பல்லவி

அழைக்கலாமோ ஐயா! அந்த
அரன் புகழைப் பாடும் ஞானக்குழந்தையை
-அழைக்க

சரணம்

அமுதம் உலகினுக்கு அன்புவழியே என்று
அன்னையின் பாலை உண்டார் அல்லும்பகலும்
பாட -அழைக்க

அரசன்:

எங்கே இருப்பினும் யாவரே ஆயினும்
இங்கே அழைத்திட ஏவிடுவாய்
[தேவி குலச்சிறையை அனுப்புதல்.]

மாயாமாளவ கௌளை— ஆதி

பல்லவி

அழைத்து வருவீர் ஐயே அந்த
ஆளுடைய பிள்ளையை அரசின் பிணிதீர்க்க
-அழைத்து

சரணம்

ஆலவா யண்ணலின் அருளே மருந்தாய்க்
கொண்டு
அகில உலகந் தன்னின் ஆரா நோய் தீர்ந்திட
-அழைத்து

காட்சி 14

குலச்சிறையார் சென்று சம்பந்தரை அழைக்கிறார். சம்பந்தர் ஆலவாயப்பரை வேண்டிச் சமணர்களோடு வாது செய்யத் திருவுள்ளம் என்று விளம்பி அருள் பெற்றுக் கிளம்புகிறார்.

நாலடிமேல்வைப்பு பழம்பஞ்சுரம்

சம்பந்தர்:

வேதவேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி அமணொடு தேரரை
வாதில் வென்று அழிக்கத் திருவுள்ளமே
பாதி மாதுடன் ஆய பரமனே!
ஞாலம் நின் புகழே மிகவேண்டும், தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே!

காட்சி 15

பாண்டியன் நோயால் துடித்துக்கொண்டிருக்கிறான். மருத்துவம் செய்யச் சமணர் வந்துள்ளனர். மங்கயர்க்கரசி அருகில் நிற்கிறாள். குலச்சிறையார் அழைத்து வரச் சம்பந்தர் வருகிறார். சிறுவராக இருக்கும் சம்பந்தர் எவ்வாறு சமணரோடு முரண்பட்டு வெல்ல முடியும் என அரசி அஞ்சுகிறாள். அது கண்டு சம்பந்தர் 'மானினேர் விழி மாதராய்' எனப் பாடி 'நான் ஒரு பாலன் என எண்ணி அஞ்சாதே. ஆலவாய் அண்ணலின் அருள் துணை இருக்கும்போது ஆனைமாமலைமுதலிய இடங்களில் அல்லல் படும் ஈனர்கட்கு நான் எளியேன் அல்லன்' என்று பாடுகிறார். ''யார் எனது நோயைத் தீர்க்கிறார்களோ அவரது சமயத்தை நான் சேர்வேன்'' என்கிறான் மன்னன். சம்பந்தர், ''மந்திரமாவது நீறு'' என்னும் பதிகம் பாடித் திருநீறு கொண்டு



அரசன் உடலில் ஒரு பகுதியில் தடவுகிறார். நோய் அப்பகுதியில் நீங்குகிறது. சமணர், மந்தரித்து நீர் தெளித்து, மயில் பீலியால் மறுபாதி உடலில் தடவுகின்றனர். நோய் இரு மடங்காகப் பெருகுகிறது. அரசன், அவரை விலக்கிச் சம்பந்தரையே நோய் தீர்க்க வேண்டுகிறான். சம்பந்தர், அப்பகுதியிலும் நீறு பூசவே, நோய் அகல்கிறது. அரசன், சமணர்களைத் தண்டிக்குமாறு அமைச்சரை ஏவுகிறான். பின்னர், சம்பந்தர், ஆலவாயண்ணல் ஆலயத்துக்குச் செல்ல, அரசனும் தேவியும் சென்று பரமனை வேண்டுகின்றனர்.

சம்பந்தர்:

பண்: கொல்லி

மானின் நேர்விழி மாதராய் வழுதிக்கு
மாபெருந்தேவி கேள்
பானல் வாயொரு பாலன்ஈங்கிவன் என்றுநீ
பரிவெய்திடேல்!
ஆனைமாமலை ஆதியாய இடங்களில் பல
அல்லல்சேர்
ஈனர்கட்கு எளியே னலேன் திருஆலவாயரன்
நிற்கவே

அரசன்:

விருத்தம்—கானடா

யார்சமயம் எமது நோயை ஒழிக்கினும்
பார் அறிய அதைத் தழுவிடுவோம்
போதரே ஆயினும் ஆதரே ஆயினும்
போற்றிடுவோம் அவர் தாளினையே

[பாண்டிய மன்னன் வெப்பு நோய் தீரச் சம்பந்தர், திருநீற்றுப் பதிகம் பாடல்.]

பண் காந்தாரம்—ரூபகம்

மந்திர மாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆல வாயான்
திருநீறே

[நோயகலப் பாண்டியன், சம்பந்தனாரை பணிந்து சமணரைத் தண்டிக்க ஆணையிடல்.]

விருத்தம்

உம்முடைய பிழையினால் நீரே அழிந்திடுவீர்
அறமிலீர் அகன்றிடுவீர்
அமைச்சர் குலச்சிறையீர் ஆணையினை ஏற்று
உற்றதைச் செய்திடுவீர்

[சம்பந்தரும், பாண்டிய அரசனும், மங்கையர்க்கரசியும் அங்கயற்கண்ணமை ஆலயம் சென்று வணங்கல்.]

பண் கௌசிகம்—ஆதி

வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே!
காடலால வாயிலாய் கபாலி நின்கடிம் மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன
கொள்கையே

காட்சி 16

நல்லூர்ப் பெருமணம்

திருஞானசம்பந்தருக்குத் திருமணம் செய்ய நிச்சயிக்கிறார்கள். நல்லூரைச் சேர்ந்த நம்பாண்டார் நம்பி என்பவரின் பெண்ணை நல்லூரில் விதிப்படி திருமணம் செய்து வைக்கிறார்கள். திருமணத்துக்கு வந்த அனைவரும் சிவபெருமானின் சோதியில் கலக்கிறார்கள். ஞானசம்பந்தர், ''கல்லூர்ப் பெருமணம் வேண்டா'' என்னும் பதிகம் பாடித் தன் மனைவியுடன் சோதியுட் கலக்கிறார்.

பண்: அந்தாளிக் குறிஞ்சி—ஆதி

கல்லூர்ப் பெருமணம் வேண்டாக் கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் ஆயத்தில்
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேய நம்பனே.

மங்களம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே

டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் இயற்றிய ''ஞானக் குழந்தை'' நாட்டிய நாடகம் முற்றும்.

---




—நிறைமதி.

## (1)

நூல் பெயர்: இயல் இசை நாடக இலக்கிய மலர்கள்

நூலாசிரியர்: சுத்தசத்வானந்தா

நூல் கிடைக்கும் இடம் : சுத்தசத்வானந்தா
5 சடையப்ப முதலி தெரு,
மந்தைவெளி, சென்னை-28.

விலை : ரூபாய் 10.

பக்கங்கள்: 96

சீர்காழி முத்துத் தாண்டவர், தில்லை விடங்கன் மாரிமுத்தாப்பிள்ளை, சீர்காழி அருணாசலக் கவிராயர் ஆகிய மூவர் கர்நாடக சங்கீதத்தின் ஆதிமும்மூர்த்திகள் எனப் போற்றப்படுகின்றனர். அவர்தம் இசைப் பாடல்களைப் போன்ற சிறந்த இசைப் பாடல்களைக் கொண்டு விளங்குகிறது, கலைமாமணி சுத்தசத்வானந்தா அவர்களின் ''இயல் இசை நாடக இலக்கிய மலர்கள்'' நூல்.

இந்நூலில் மாமயிலை கற்பகாம்பாளை ஆசிரியர் 100 கற்கண்டுப் பாடல்களால் போற்றியுள்ள ''கற்பகாம்பாள் அந்தாதி''யும் இடம் பெற்றுள்ளது. ''நவகிரக நல்லஞ்சலி'' பாடல் வினைகள்தீர்த்து, வேண்டிய அருளைக் கற்பாருக்கு வழங்கும். இத்தெய்வத் தமிழ் நூலை இறையன்பர்கள் எல்லோரும் கற்று இறையருளைப் பெறலாம்.

## (2)

நூல் பெயர்: தமிழ் வேதத் திரட்டு

தொகுப்பாசிரியர் : சிவ. ஆ. பக்தவச்சலம்

நூல் வெளியீடு: சிவனடியார் திருக்கூட்டம்
43, சன்னதி தெரு
நல்லூர்ப் பேட்டை
குடியேற்றம் 632 602.

விலை : ரூ. 25

சலுகை விலை : ரூ. 10.

பக்கம் : 160.

தமிழ் வேதங்களாகிய திருமுறைப் பதிகங்களை நாளும் பாராயணம் செய்வதால் உண்டாகும் பலன்களை விவரித்துக் கூறுகிறது இந்நூல்.

நரம்புத்தளர்ச்சி நீங்க, சனி கிரகதோஷம் நீங்க, வழக்குகளில் வெற்றி காண, தடைப்பட்ட திருமணம் நிறைவேற, சிவபுண்ணியம் பெற, பிறவிப் பயனைப் பெற, பாம்பு, தேள் விஷம் நீங்க, பணம் பெற, விரோதிகளை வெல்ல, முதல்மதிப்பெண் பெற எனப் பல வகை நற்காரியங்களுக்கும் இன்னின்ன திருமுறைப் பதிகங்களை ஓதி இறையன்பர்கள் பயன்பெறலாம் என வழிகாட்டி உதவுகிறது இந்நன்னூல். சலுகை விலையில் இந்நூல் ரூ. 10-க்குக் கிடைப்பது பாராட்டிற்குரியது.

# ஆடல் காணீரோ... திருவிளையாடல் காணீரோ...



கம்பன் கவிநயமணி

## வே. தியாகராஜன்

## (12)

தேவலோகத்தில் தேவேந்திரனைக் காண வந்த வருணன், ''இன்று ஏதோ கவலையா யிருக்கின்றீர்கள் போலக்காண்கின்றதே? ஏன்?'' என்று இந்திரனைக் கேட்க, தேவேந்திரன், ''அன்பிற்கு இரங்கும் தெய்வமான மதுரை நாயகனை பூஜை புரிய சிறிது தாழ்ந்தது. அதனால்தான் சிறிது வேதனை'' என்றான். அது கேட்ட வருணன் ''ஓஹோ! அது அவ்வளவு விசேடமான தெய்வமா?'' எனக் கேட்க, 'அது எனது பிரம்மஹத்தி தோஷத்தையும், வெள்ளையானையின் சாபத்தையும் தீர்த்து வைத்ததை நீ அறிய மாட்டாயா?'' என்றான் இந்திரன்.

''என்ன அவ்விலிங்கந்தான் மா இலிங்கமோ?
என்று முன்னீர்
மன்னவன் வினவலோடும் மகபதி மொழிவான்' முன்பு என்
தன்னரும் பழியும் வேழச் சாபமும்
தொலைத்தன்றோ?
அன்னதை அறிந்திலாய் கொல் என்ன
நீர் அண்ணல்கூறும்.''

அது கேட்ட வருணன் ''தெய்வீக மருத்துவரான அசுவினி தேவராலும் தீர்க்க முடியாத எனது வயிற்று நோயை அப்பெருமான் தீர்த்து வைப்பானோ?'' எனக்கேட்க புன்னகை பூத்த இந்திரன் ''உனக்கு இதில் என்ன சந்தேகம்? பிரம்ம விட்டுணுக்களால் தீர்த்து வைக்க முடியாத பிறவிநோயையே தீர்க்கவல்ல பெருமான், உடல் பிணியைத் தீர்க்கவா மாட்டான்? நீ அதை சோதனை செய்து அறிவாயாக'' என்றான்.

''அரி அயராலும் தீராப் பிறவி நோய் அறுக்க
வல்ல
பெரியவன் இந்த யாக்கைப் பெரும் பிணி
பிறவும் தீர்த்தற்கு
அரியனோ? ஐயன் செய்யும் திருவிளையாட்டை
யின்னே
தெரியநீ சோதியென்ன தென்கடற்சேர்ப்பன்
சொல்வான்.''

வருணன், ''இன்று நான் இங்கு வரும்பொழுது, காமதேனுவும் அதன் கன்றும் எதிர்ப்பட்டன. அந்த நற்சகுனத்தால் இந்த நல்லமொழி கேட்டேன்.'' என்று கூறித்தன் இடம் சேர்ந்தான்.

சிவபெருமானின் திருவிளையாடலைக் கண்டு களிக்கவும், தனது வயிற்று நோயைத் தீர்த்துக் கொள்ளவும் எண்ணிய வருணன் மதுரையை அழித்து வருமாறு ஏழு கடல்களையும் ஏவினான். மரங்களையும் மலைகளையும் பெயர்த்து எறிந்து கொண்டு, ஊழிக்காலத்தில் பொங்கி வருவது போல் வந்தது கடல். ''பிரம கல்பத்தும் அழியாத இவ்வூருக்கு கூட அழிவு வருகின்றதா'' என்று, வருணனின் செயல் அறியாதவர் கவலை கொண்டனர். ''சூலமும் நெருப்பும் ஏந்தி விளையாடும் இறைவனின் விளையாட்டா? நமது பாபமா? உலகத்தை அழிக்க வரும் நஞ்சா? அல்லது இது ஊழிக் காலமா?'' என நகரத்தினர் நடுங்கினர்.

''சூலமோடு அழலேந்தும் சொக்கர்
திருவிளையாட்டின்
சீலமோ? நாமிழைத்த தீவினையின்
திறமிதுவோ?
ஆலமோ? உலகமெலாம் அழிய வரும் பேரூழிக்
காலமோ? எனக் கலங்கிக் கடிநகரம்
பனிப்பெய்த''

மண்ணையும் திசையையும் மறைத்து, ஆகாயத்தை அளாவி, சூரியனின் கண்களும் பயத்தினால் மூடிக்கொள்ளும்படிவரும் கடல் நீரைக் கண்ட பாண்டியன், அம்மையை ஒரு பக்கத்தில் கொண்ட பெருமானை வணங்கினான்.

''மண்புதைக்க; திசை புதைக்க; மயங்கியிருள்
போல் வருநீத்தம்
விண்புதைக்க; எழுமாடவியநகரின் புறத்திரவி
கண்புதைக்க வருமளவில் கண்டரசன் நடு
நடுங்கிப்
பெண் புதைக்கும் ஒரு பாகப் பிரானடியே
சரணமென்னா''

என்று கடல் கொதித்து வரும் காட்சியைக் காட்டுகின்றது பரஞ்சோதியின் மந்திரக்கவிதை.

கடல் பொங்கி வரும் காட்சியைக் கண்ட அபிடேகப் பாண்டியன், கடலினின்று நஞ்சு தோன்றிய காலத்து நடுங்கிய திருமாலைப் போலவும், காலனைக் கண்டு நடுங்கிய மார்க்கண்டனைப் போலவும் நடுநடுங்கி சிவபெருமானின் திருவடியில் வீழ்ந்து முறையிட்டான்.

''ஆலமெழுந்து இமையவர் மேல் அடர்க்கவரும்
பொழுது அஞ்சும்
மாலெனவும்; தன்னுயிர் மேல் மறலி வரும்
பொழுது அஞ்சும்
பாலனெனவும் கலங்கிப் பசுபதி சேவடியில்
வீழ்ந்து
ஓலமென முறையிட்டான் உலகு புகழுரையிட்
டான்''.

தன்னை நோக்கி முறையிட்ட பாண்டியனை 'அஞ்சேல்' எனக் கூறிய சோம சுந்தரப் பெருமாள் தனது சடையிலிருந்து நான்கு மேகங்களை உண்டாக்கி, 'கடலைப் பருகி வருக' என ஏவினார். அவ்வாறு எழுந்த மேகங்கள் கடல்நீரை வரண்டு போகுமாறு குடித்துத் தீர்த்தன. சிவபெருமானே முழு முதற்கடவுளென நம்பிய அடியவரின் ஏழு பிறப்புகளான கடல்கள் வற்றுவது போல் கடல் வற்றிக் காணப்பட்டது. மதுரை மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

வருணன் தன் தோல்வி கண்டு கோபமடைந்து, வெட்கமும் அவமானமும் கொண்டு சிவபெருமானின் திருவிளையாடலை அறியாதவனாகி, ஏழு மேகங்களை அழைத்து, ''கடல் நீரை வற்றக் குடித்து மழையாக மதுரையை அழிப்பீர்கள்'' எனக் கட்டளையிட்டான். அவையும் பூமி தெரியும் வண்ணம் கடல்நீரை வற்றக்குடித்து மழை பொழியத் தொடங்கின. உலகத்தைக் தாங்கும் ஆதிசேடனே இடியோசை கேட்டு நடுங்கினான். பெரிய பூசணிக்காய்கள் போல ஆலங்கட்டிகள் வீழ்ந்தன. பளிங்குத் தூண்கள் போல மழைத் தாரைகளைச் சொரிந்தன. ஊழிக்காலம் போல உலகம் இருள் நிறைந்து காணப் பெற்றது. மதுரை நடுங்கியது. இறைவனது அருளை உணர்ந்து பழகிய பாண்டியன் கோயிலை அடைந்து இறைவனை வணங்கி முறையிட்டான்.

''விடையினை! ஆலமுண்டமிடற்றினை!
கங்கை தாங்கும்
சடையினை! கூற்றை வென்ற தாளினை!
மேருச் சாபப்
படையினை! அடியேம் துன்பப் பாட்டினை
நீக்கியாளும்
தடையினையாகி எங்கள் நல்லுயிர் காத்தல்
வேண்டும்''.

தென்னவர் குலப்பெருந் தெய்வமாகிய சிவபெருமான் தனது சடையிலிருந்த நான்கு மேகங்களையும் நீக்கி, ''நீங்கள் மதுரையின் நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து நான்கு மாடங்களாகி ஏழு மேகங்களின் மழையினின்று மதுரையைக் காப்பாற்றுங்கள்'' என ஏவினான். அவைகள் நான்கும் மதுரையை மூடிக்கொண்டன. துன்பம் நீங்கிப் பாண்டிய மன்னனும் மதுரை மக்களும் அந்த நிழலில் தங்கி இன்புற்றனர். வருணன் வெட்கமடைந்தான்.

வருணன் மதுரையை அடைந்து பொற்றாமரை யெனும் புனிதமான பொய்கையை அடைந்தபோது, தனது வயிற்று நோய் நீங்கி சுகமடைந்தான். தேவலோகத்திலிருந்து பூசைக்கான பொருள்களைக் கொண்டு வந்து சோமசுந்தரப் பெருமானைப் பூசித்தான். இறைவன் மகிழ்ந்து 'வருண! உனக்கு யாது வேண்டும் எனக் கேட்க, ''பிரமன் முதலா எவருக்கும் அகப்படாத ஒளியுருவான பெருமானே! உன்னை நான் சோதிக்கத் துணிந்தேன். என் பேதை குணத்தை அறிந்தும் எனக்கு நன்மை செய்து நோய் தீர்த்தாயே! குற்றமே குணமாகக் கொள்ளுவது உன் இயல்போ!''


''வேத முதற் கலைக்காட்சி முதலளவை
விரிஞ்சன் முதல் விண்ணோன் செய்யும்
சோதனையுள் அகப்படாத சோதி! உனைச்
சோதிக்கத் துணிந்தேன் அந்தோ!
பேதமையிடத்து என்ன குணம் கண்டு என்
பிணிதீர்த்து என் பெற்றாய்? ஆசை
கோதமிலாய்! குற்றமே குணமாக்
கொள்வது நின் குணமோ? ஐயா!''

தேவேந்திரன் உனக்குத் தாமதமாகப் பூசனை செய்து கவலையடைந்தது கண்டு நான் அவனைக் கேட்டதும், அதன் காரணமாக நான் உன்னை சோதித்ததும், இறைவனே உன் அருளால், என் நோய்க்கு மருந்தாக முடிந்தது.

''ஆறுமதி முடியணிந்த அருட்கடலே
வயிற்று நோயன்றி மேனாள்
மாறுபடும் இருவினையும் மலவலியும் கெட
வீட்டின் வழியும் பெற்றேன்.
வேறுமினி மந்திர மென்னை? மணியென்னை?
மருந்தென்னை? மெய்மையாகத்
தேறுமவர்க்கு இப் புனித தீர்த்தமே
பிணியனைத்தும் தீர்ப்பதன்றோ?''

எனப் பொற்றாமரையின் பெருமையையும் புகழ்ந்து போற்றி ''கடல்களை ஏவியதையும், மேகத்தை விடுத்ததுமான இரு குற்றங்களையும் பொறுத்து அருள்க'' என வேண்டி வணங்கிச் சென்றான்.

மதுரையை நான்குபுறமும் இறைவன் விடுத்த மேகங்கள் கூடமாக கூடிக் காத்தலால் மதுரைக்கு ''நான் மாடக் கூடல்'' எனப் பெயர் வந்தது.



சோமசுந்தரப் பெருமானால் அளிக்கப்பட்ட நவரத்ன கிரிடம் தரித்த அபிடேகப் பாண்டியன் மதுரையை அரசாட்சி புரிந்து வருகையில், ஒரு சித்தர் மதுரை நகரத்தில் தோன்றிச் சஞ்சரிக்கலானார். கிழக்கு வாசலில் இருப்பது போல மேற்கு வாசலில் தோன்றுவார். வடக்கு வாசலில் இருப்பது போல் தெற்கு வாசலில் இருப்பார். தூரத்திலிருக்கும் மலைகளைப் பக்கத்தில் வரவழைப்பதும், பக்கத்தில் உள்ள மலைகளை தூரமாக்குவதும் இளைஞரை முதுமையாக்குவதும், முதியோரை இளமையாக்குவதும் ஆணைப் பெண்ணாக்கியும், பெண்ணை ஆணாக்கியும், கூன் கூருடு, செவிடு, ஊமை முதலானவரை நல்ல நிலைமையாக்கி அவர்களின் குறைதீர்த்தும், மலடியை மகப்பெறச் செய்தும் விளையாடல் புரிவார். செல்வர் வீட்டுப் பொருளெல்லாம் ஏழை வீடுகளில் செல்லவும், நண்பர்களுக்குள் சண்டை ஏற்படவும், எட்டி மரத்தில் நல்ல பழம் பழுக்கவும் செய்தார். தூரத்தில் இருப்பனவற்றை பக்கத்தில் வரச் செய்தும் (அதிர்ச்சியம்) மறைந்து உள்ளனவற்றை பக்கத்தில் வரச்செய்தும் (அஞ்சனம்), யாவரையும் வசியப்படுத்தியும் (வசியம்), அவரவர்களை வயதாகாமல் ஒரு நிலையிலிருக்கும்படியும் (வயத்தம்பம்), செய்வார். பாதாள உலகத்திலுள்ள பொருள் பூவுலகம் வருமாறும் பலவிதமான வித்தைகளைச் செய்திருந்தார் அந்த சித்தர்.

''நாக நாடு பொன்னாட்டுள பொருளும் அந்
நகருள்
ஆக வாக்கியும் இன்னணம் விச்சைகளனந்தம்
மாக நாயகன் மலைமகள் நாயகன் மதுரை
ஏக நாயகன் திருவிளையாடல் செய்திருந்தான்''

இவ்வாறு விளையாடல் புரிந்த சித்தரைக் கேள்விப்பட்ட வேந்தன் அவரை அழைத்து வருமாறு தனது ஆட்களை அனுப்ப, அவர்கள் சித்தர் இருக்குமிடம் சென்று அவரது விளையாடல்களைக் கண்டு இருந்தார்கள். அதுகண்டு ஆச்சரியமடைந்து அரசன் தனது மந்திரிகளைக் கொண்டு அவரை அழைக்க ''எமக்கு மன்னனால் ஆவது ஒன்றுமில்லை'' என மறுத்தார்.

''அமைச்சர் தங்களை விடுத்தனன்; அமைச்ச
ரும் சித்தர்
தமைச் சரண்பணிந்தரசர்முன் வருகென; தவத்
தோர்
எமக்கு மன்னனால் என்பயன் என மறுத்திட
மண்
சுமக்கு மன்னவன் தம்மவர் தொழுதனர்
போனார்''

இது கேட்ட அரசன், ''இறைவன் அருளைப் பெற்ற பெரியோர்கள், அந்த மாநில அரசர் மட்டுமா? இந்திரன், பிரமன், திருமால் ஆகியவர்களையே மதிக்கமாட்டார்களே'' என்று எண்ணினான்.

''மன்னவன் முனமைச்சர் சித்தர் மறுத்துரை
மாற்றங்கூற
முன்னவன் அருள் பெற்று இம்மை மறுமையும்
முனிந்த யோகர்
இந்நில வேந்தர் மட்டோ? இந்திரன் அயன்மால்
ஏனோர்
தன்னையும் மதிப்பரோ என்றிருந்தனன் தரும
வேந்தன்''.

இவ்வாறு எண்ணிய அரசன், ''பெரியவரென அவரை எண்ணாது என்ன செய்தேன்?

அவரை இங்கே வருமாறு ஆளனுப்பி அழைத்து அவமதித்து விட்டேனே! நானே சென்று அவரைக் காண்பேன் எனப் புறப்பட்டு வந்தான்.

''பின்னேயம் அச்சம் பெருகப் பெரியோரை எண்ணாது
என்னே எளியாரென யான் இகழ்ந்து இங்ஙன் ஈண்டச்
சொன்னேன்' அவர்க்கு என் குறை? என்னிற் றுருவி நானே
தன்னேரிலாதார் தமைக் காணத் தகுவன் என்னா''.

பாண்டியன் வருவதறிந்த சித்தர் தனது விமானத்திற்கு வடமேற்கு திசையில் எழுந்தருளி இருந்தார். அன்று தை மாதம் முதல் நாள். பாண்டியன் சிவதரிசனம் செய்து திரும்புங்கால் புலித்தோலாசனத்தில் ஐம்புலன்களை வென்றவராக, யோகபட்டயம் அணிந்து, மழுப்படை மேல் கரத்தினை வைத்து அமர்ந்திருந்தார். காவலர் அவரை ''எழுந்து போ'' என்றனர்.

பின்னால் வந்த அரசன், ''நீர் யார்? உமது ஊர் எது? உமக்கு என்ன தெரியும்? உமக்கு என்ன வேண்டும்?'' என்ன ''நாம் எந்த நாட்டிலும் எந்த நகரிலும் திரிவோம். நாம் காசியைச் சேர்ந்தவர். பிச்சை எடுத்து திரிபவரெல்லாம் எமக்கு உறவினர். பல சிவத்தலங்களைத் தரிசித்து, மதுரையான முத்தி நல்கும் இச் சிவ ராச தானிக்கு வந்தோம். இங்குள்ளவர்களுக்கு எமது விளையாட்டுகளைக் காட்டி, வேண்டுவனவற்றை அளிக்க வந்தான். அறுபத்து நான்கு கலைகளும் தெரிந்த ''எல்லாம் வல்ல சித்தர்'' என்பது எமது நாமம். உன்னால் நமக்கு ஆவது ஒன்றுமில்லை?'' எனக் கூறினர் சித்தர். இவரது இறுமாப்புள்ள சக்தியை எவ்வாறு சோதிப்பது எனப் பாண்டியன் என்ன, பெரிய பாக்குமரம் போன்ற கரும்பு ஒன்றைக் கொண்டு வந்து ஒருவன் அரசனுக்குக் காணிக்யளித்துச் சென்றான். அதை வாங்கி, ''எல்லாம் வல்ல சித்தர் நீர் என்பது உண்மையானால் இக் கல்லானைக்கு இந்த கரும்பையளியும்! எல்லாம் வல்ல சித்தர் நீர், மதுரைப் பெருமானும் நீரே என ஒப்புக்கொள்கிறேன். உமக்கு வேண்டியதெல்லாம் தருவேன்.'' அது கேட்ட சித்தர் ''பாண்டிய! உன்னால் எனக்கு என்ன தரமுடியும். உனக்கு யானே எல்லாம் தருவேன். ஏதாவது ஒருவகையில் அறிவு பெற்றால், உலகத்தில் அதைக் கொண்டே பெயரும் புகழும் பொருளும் பெற நினைப்பார். அதோ பார். கல்லானை கரும்பு தின்னப் போகிறது.

''செல்லா உலகத்தினும் சென்று ஒரு விஞ்சை கற்றோர்
பல்லாரும் நன்கு மதிக்கப் பயன் எய்துவார்கள்
எல்லாமறிந்த எமக்கு ஒன்றிலும் ஆசையில்லை
கல்லானை கன்னல் கறிக்கின்றது காண்டி என்றார்''

## ஞானியர் யார்?

**காட்டையும், வீட்டையும்**
**பகைவரையும் நண்பரையும்**
**ஓட்டினையும், பாவையர் உதட்டினையும்**
**சமமாக பாவிப்பவர் யாரோ அவரே ஞானியாவார்.**

**— மூகர்**

கடைக்கண்ணால் அங்கிருந்த கல்லானை ஒன்றைக் கண்டார் சித்தர். கல்லானை கண் திறந்து பிளறியது. துதிக்கை நீட்டிப் பாண்டியன் கையிலுள்ள கரும்பைப் பிடுங்கி கடைவாய் வழியாக, சாறு பாயும் வண்ணம் கடித்துத் தின்று, கையை ஆட்டிக் கொண்டு ஊஞ்சல் போல அசைந்து ஆடியது. மறுபடியும் சித்தர் யானையை உற்றுப்பார்த்தார். பாண்டியன் கழுத்திலிருந்த முத்தாரத்தை எட்டி பறித்தது யானை. வேலையாட்கள் யானையை அடிக்க வந்தனர். யானையைக் கோபமாக சித்தர் உற்றுப் பார்த்தார். யானை முத்து மாலையை விழுங்கியது. அது கண்டு சித்தரை அடிக்சு எண்ணிக் கைகளை ஓங்கி வந்தனர் பாண்டியன் ஆட்கள். புன்சிரிப்பு கொண்ட சித்தர் அவர்களை 'நில்லுங்கள்' எனக்கூற ஓங்கின கை ஓங்கியபடி இருக்க சித்திரம் போல் நின்றனர்.

''அப்போது இளமூரல் அரும்பிய சித்தசாமி
கைப்போது அமைத்து கடிந்தோர்தமை நிவமிடென்ன
மைப்போதக மன்னவர் வைத்து அ்டிப்பேர்க்கலாற்றாது
ஒப்பு ஓதரிய நிலை ஓவியம் போல் நின்றார்''.

பாண்டியன் கோபம் நீங்கி, நல்லறிவு தோன்றி சித்தரின் திருவடிகளில் விழுந்து வணங்கினான். அன்புக்கிரங்கும் கருணாமூர்த்தியான சித்தபெருமான். ''உனக்கு என்ன வேண்டும்' என்று கேட்க, புத்திரபேறு வேண்டினன் அரசன். சித்தர் மீண்டும் கல்லானையை உற்று நோக்கினார். யானை விழுங்கிய மாலையை திரும்ப அளித்தது. யானையிடமிருந்த மாலையை வாங்கிய பாண்டியன் தன் எதிரிலிருந்த சித்த புருஷனை காணாது மயங்கினான். யானையும் கல்லானையாக மாறியது.

சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலே இது என அறிந்து பாண்டியன் இறைவனை வணங்கித் தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். சின்னாட்களுக்குப் பின் விக்கிரமன் என்ற மகனைப் பெற்று, அவனுக்கு அரசை அளித்து இறைவனின் திருவடியிற் கலந்து இன்புற்றான்.

(தொடரும்)

# அம்பாளை வழிபடுவதன் பலன்



தவத்திரு
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்

அம்பாளை உபாசிப்பதே ஜன்மா எடுத்ததன் பெரிய பலன். அன்பு மயமான அம்பிகையைத் தியானிப்பதைவிடப் பேரானந்தம் எதுவும் இல்லை. பெரிய சித்தாந்தங்கள், மதங்கள் எல்லாம் எத்தனையோ இருக்கின்றன. இவை எல்லாவற்றுக்கும் முடிவாகக்கிடைக்கிற பெரிய பலன் அம்பாளைத் தியானிப்பதால் லகுவாகக் கிட்டிவிடுகிறது. 'அம்மா' நான் எத்தனையோ தோஷம் உள்ளவன். என்றாலும், உன்னை நம்பிவிட்டேன். நீ அருள்செய்து விட்டால் எத்தனை தோஷமானாலும் தூர ஓடிவிடும். நான் எப்படி இருக்கவேணுமோ அந்த மாதிரியாகஇருக்கும்படியாகநீயே அருள் பண்ணம்மா என்று அவளிடம் நம்மை ஓயாமல் ஒப்புக்கொடுத்துக் கொண்டிருந்தாலே போதும்.— அதைவிடப் பெரிய மதமோ, சித்தாந்தமோ அநுஷ்டானமோ இல்லை. எல்லாம் அவள் சித்தப்படி ஆகட்டும் என்று விட்டுவிட்டு, நாம் பஞ்சுமாதிரி மனசில் எந்தக் கனமும் இல்லாமல் லேசாகிவிட்டால் அதை விடப் பேரானந்தம் இல்லை.

அம்பாளை உபாசிப்பதற்கு வேறு பலன் எதுவும் வேண்டாம். அதுவே அதற்குப் பலன். ஆனாலும், இந்த லோகத்தின் மாயையில் நாம் எல்லோரும் நன்றாகச் சிக்கிக் கொண்டிருப்பதால், 'நான்' என்பதை விட்டு, அவளை அவளுக்காகவே உபாசிக்கிற அனந்தம் நமக்கு ஆரம்பதசையில் புரியமாட்டேன் என்கிறது. நமக்கு என்று எதைஎதையோ எதிர்பார்த்து, அதை எல்லாம் அவள் பூர்த்தி செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டு, அதற்காக அவளை உபாசிக்கத் தொடங்குகிறோம். இந்த நிலையில் அவளும்கூட நம்மைவிட்டுப் பிடிக்கிற மாதிரி, நம் பிரார்த்தனைகளை நிறைவேற்றி வைக்கிறாள். தர்மத்துக்கு விரோதமாக இல்லாத வரையில் நாம் செய்கிற பிரார்த்தனைகளுக்குச் செவிசாய்க்கிறாள்.

மனுஷ்ய சுபாவம் ஆசார்யாளுக்கு நன்றாகத் தெரியும். அம்பாள் உபாசனையால் ஜனன நிவிருத்தி கிடைக்கும். மோட்சம் கிடைக்கும் என்று சொன்னால் எடுத்த எடுப்பில் யாரும் அதில் ஈடுபடமாட்டார்கள் என்பது ஆசார்யாளுக்குத் தெரியும். அதனால் அம்பாளை உபாசிப்பதன் பலன் இன்னின்ன என்று 'சௌந்தர்ய லஹரியில்' சொல்கிறபோது, முதலில் படிப்பு, செல்வம், அழகு முதலியன கிடைக்கும் என்கிறார்.

'ஸரஸ்வத்யா லட்சும்யா' என்று ஆரம்பிக்கிற சுலோகத்தில் அம்பிகையை ஆராதிப்பதால் கிடைக்கிற பலன்களை வரிசையாகச் சொல்கிறார்.

இதில் விசேஷம் என்னவென்றால், சாதாரணமாக ஒவ்வொரு ஸ்துதியின் முடிவிலும் கவி 'இந்த ஸ்தோத்திரத்தைச் சொல்வதால் இப்படிப்பட்ட பலன்கள் கிடைக்கும்'' என்று சொல்வது ஒரு மரபு. இதை 'பலச்ருதி' என்பார்கள். அதாவது அந்த ஸ்தோத்திரத்தின் சக்தியாலேயே அந்தப் பலன்கள் கிடைக்கும் என்று தொனிக்கிற மாதிரி இருக்கும்.'இதைப் பாராயணம் செய்வதால் 'இதையே படிப்பதால்' என்று திரும்பத் திரும்ப ஸ்தோத்திர கர்த்தா நூலைச் சிலாகித்துச் சொல்வார். ஆனால் துளிக்கூட அகம்பாவமே இல்லாத ஆசார்யாளோ, 'சௌந்தர்ய லஹரி' பாராயணத்துக்கு இது பலன்' என்று சொல்லாமல், 'அம்மா உன்னைப் பூஜிப்பவனுக்கு நீ இப்படியாகப்பட்ட அநுக்கிரஹங்களை செய்கிறாய்' என்றே சொல்கிறார்.

முதல் பலனாக சரஸ்வதி கடாட்சம் கிடைக்கும் என்கிறார். அதாவது நல்ல கல்வி, உண்மையான கல்வியின் பயனாக நல்ல குணம் கிடைக்கும் என்கிறார். பிறகு லட்சுமி கடாட்சம் கிடைக்கும் என்கிறார். அதாவது நிறைய சம்பத்து கிடைக்கும் என்கிறார்.

அம்பாளை உபாசிப்பவர்கள் தனியாக லட்சுமி, சரஸ்வதி இருவரையும் உபாசிக்கவே வேண்டும் என்பதில்லை. அவர்கள் இரண்டு பேரும் இவளுக்கு இரண்டு பக்கத்திலும் சாமரம் வீசிக் கொண்டிருக்கிறார்கள். இப்படியே லலிதா சஹஸ்ரநாமத்தில் சொல்லி இருக்கிறது. (ஸ சாமர ரமா வாணீ ஸவ்ய தட்சிண ஸேவிதா) சகல சக்திக்கும் ஆதாரமான பராசக்தியை உபாசித்தால் இவளே சரஸ்வதியையும் லட்சுமியையும் கடாட்சிக்கச் செய்கிறாள். காமாட்சிக்கு சரஸ்வதியும் லட்சுமியும் இரண்டு கண்கள். 'க' என்று பிரம்மாவுக்குப் பெயர். 'சிவ' பத்தினி சிவா என்பதுபோல் 'க'வின் பத்தினியான சரஸ்வதி தான் கா. மா என்றால்மஹாலட்சுமி, மாதவன் என்றால் லட்சுமிபதி, 'கா' வையும் மா வையும் தன் அட்சங்களாகக்(கண்களாக) கொண்டவள் எவளோ அவளே 'காமாட்சி'.

சரஸ்வதி கடாட்சம், லட்சுமி கடாட்சம் இரண்டும் அம்பாள் அநுக்கிரஹத்தால் கிடைக்

கும். இந்த இரண்டையும் பற்றி மனுஷிய சுபாவம் ரொம்பவும் விசித்திரமாகஇருக்கிறது. எல்லாரும் தங்களுக்கு ரொம்பவும் சரஸ்வதி கடாட்சம் அதாவது புத்திசாலித்தனம் இருப்ப தாகவே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். தங்களை மகா புத்திசாலிகளாகவே வெளியில் காட்டிக் கொள்ளப் பிரியப்படுகிறார்கள். ஆனால் நல்ல புத்தி வேண்டும் என்று அதற் காக தாபத்தோடு யாரும் பிரார்த்திப்பதாகத் தெரியவில்லை. பொதுவாக புத்திசாலித்தனம் என்பது சாமர்த்தியம் என்றுதான் நினைக்கப் படுகிறது. ஞானமும், விவேகமும் தான் உண்மையான புத்திமானின் லட்சணங்கள். இவற்றுக்கு யாரும் ஆசைப்படுவதில்லை. 'நமக்கு நிறைய சாமார்த்தியமும் சாதுர்யமும் இருக்கின்றன. அதாவது யாரையும் ஏமாற்றி விடலாம்' என்று அவரவரும் சந்தோஷப்பட்டு கொண்டு, இந்தப் 'புத்திசாலித்தன'த்தோடு நின்றுவிடுகிறோம். ஆனால் லட்சுமி கடாட்சம் மட்டும் எவ்வளவு இருந்தாலும் நமக்குப் போதமாட்டேன் என்கிறது. மண்டுவாக இருந் தாலும்கூடத் தன்னைப் புத்திசாலியாகக் காட் டிக் கொள்கிறார். அதற்கு நேர்மாறாக,நமக்கு எத்தனை சம்பத்து இருந்தாலும் அது வெளி யில் தெரியக்கூடாது என்று ஏழை வேஷம்தான் போடுகிறோம். ஒருத்தனைப் பற்றி யாராவது 'எத்தனை புத்திசாலி?' என்று பேசினால் சந் தோஷப்படுகிறான். ஆனால் ஒருத்தன் பாங்கி யில் லட்ச லட்சமாக பணம் போட்டிருக்கி றான் என்று யாராவது சொன்னால், அவ னுக்குக் கோபம்தான் வருகிறது. தங்களுக்கு இருக்கிற செல்வம் போதாது என்று நினைப்ப தால் தான் இவர்களுக்கு அதைப் பற்றிச் சொன்னாலே கோபம் வருகிறது. அதிருப்தி தான் தரித்திரம். திருப்திதான் சம்பத்து. ஆகையால் நாம் நிஜமான புத்திசாலிகளா னால், பணமில்லாத தரித்திரர்களாக இருந்தா லும்கூட அப்படிச் சொல்லிக் கொள்ளாமல் மனசால் நிறைந்து, திருப்தியால் பணக்காரர் களாக இருந்துகொண்டிருக்கலாம். தரித்திரம் என்று சொல்லிக் கொண்டால்தான் நமக்கு யார் பணம் கொடுக்கிறார்கள்? சொல்லிக் கொள்ளாமலேதான் பணக்காரரைரைவிடத் திருப்தியாக இருப்போமே!.

புத்தி, செல்வம்-இவற்றோடு ஒவ்வொருத் தருக்கும் அழகாக இருக்க வேண்டும் என்கிற ஆசை இருக்கிறது. தான் புத்திசாலி என்பதைப் போல, எல்லோரையும்விட தானே அழகு என் கிற எண்ணம் நம் ஒவ்வொருத்தருக்கும் இருக் கிறது. இதற்குத்தான் அலங்காரம் எல்லாம் பிரமாதமாகச் செய்து கொள்கிறோம். தினத் துக்குத் தினம் பாஷன்கள் மாறிக்கொண்டே யிருப்பதெல்லாம் நம் அழகைப் பிரகடனம் பண்ணிக் கொள்ளத்தான். பரமகருணாமூர்த்தி யான அம்பாள் கேவலம் ரத்த-மாம்ஸ சம்பந்த மான இந்தச் சரீர அழகை விரும்புகிறவர் களுக்கு அதைக்கூடப் பூரணமாகக் கொடுத்து அனுக்கிரகிக்கிறாள். 'ஸரஸ்வத்யா லட்சும்யா' என்கிற சௌந்தரிய லஹரி சுலோகத்தில் ஆசாரியாள் இதையும் சொல்கிறார். 'அம் பாளை உபாசிக்கிறவனுக்கு பிரம்மாவே அசூயைப்படுகிற அளவுக்கு சரஸ்வதியின் அநுக் கிரகம் உண்டாகிவிடும்; மகாவிஷ்ணு பொறா மைப்படுகிற அளவுக்கு மகாலட்சுமியின் அநுக் கிரகம் கிடைத்துவிடும். இவனைப் பார்த்து 'மன்மதன் தானோ?' என்று ரதியே சந்தேகப் படுகிற மாதிரி லாவண்யம் உண்டாகிவிடும் என்கிறார்.

இத்தனையும் இருந்து தீர்க்காயுசு இல்லை என்றால் என்ன பிரயோஜனம்? அம்பாள் சிரஞ் ஜீவித்துவமும் தருவாள் என்கிறார்.

'இதற்கு மேல் வேறென்ன வேண்டும்' என்று தோன்றலாம். ஆனால் இதற்கு மேல் தான் அம்பாளின் பரமானுக்கிரஹத்தைத் தேடச் செய்யும் கேள்வியே பிறக்கும். இத் தனை பணம், அழகு, புத்தி எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு இத்தனை காலம் ஓட்டி யாச்சு; இதிலெல்லாம் வாஸ்தவத்தில் என்ன மனநிறைவைக் கண்டோம்? இதையெல்லாம் வைத்துக் கொண்டு எப்போது பார்த்தாலும் சஞ்சலப்பட்டுக் கொண்டே ஒன்றை விட்டால் இன்னொன்று என்று தாவிக்கொண்டே இருந்துவிட்டோம். நிரந்தர சௌக்கியத்தை, சாந்தத்தை-இவை எதனாலும் பெற்றதாகத் தெரியவில்லையே! இதை எப்படிப் பெற்றுக் கொள்வது? என்கிற கேள்வி பிறக்கும். நடு நடுவே நமக்கு இந்தக் கேள்வி தோன்றினாலும் அடுத்த கணமே மாயை நம்மை இழுத்துக் கொண்டு போகிறது. ஆனால் நாமாக இப்படி நினைக்காமல் அம்பாளை உபாசித்ததன் பல னாக அவள் இப்படி நம்மை நினைக்கப்பண்ணு கிறபோது, அந்த நினைப்பு நாளுக்கு நாள் மேலும், மேலும் தீவிரமாக ஆகும். பணம் வேணும், படிப்பு வேணும், அழகு வேணும், ஆயுசு வேணும்' என்பதெல்லாம் மேலும் மேலும் நம்மைப் பாசத்தில் கட்டிப் பிரமை யில்தான் தள்ளிக்கொண்டிருந்தது என்கிற அறிவு உண்டாகும். பாசம் என்றால் கயிறு, பாசத்தில் கட்டப்படுவது பசு, கயிற்றைப் போட்டுத் தறியில் கட்டின பசு மாதிரி, ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கு மேல் போகமுடியாமல் அதற்குள் கிடைக்கிற தற்காலிக இன்பங் களையே மேய்ந்து கொண்டு, அசட்டுத்தனமாக 'இதுவே எல்லாம்' என்று திருப்திப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தக் கட்டை அறுத்து கொள்ளவேண்டும். அப்புறம் பரம சுதந்திரம். இந்த இந்திரியங்களின் சின்ன சௌக்கியங் களுக்கு அப்புறம் அகண்டமான, சாசுவத மான ஆத்ம ஆனந்தம்! பாசம் போய், நாம் பசுவாகக் கட்டுப்பட்டுக் கிடந்த நிலையும் போய்விட்டால் அப்புறம் நாம் பரப்ரம்மம் தான். பணம், புத்தி, ஆயுள், அழகு ஆகிய சிற்றின்பங்களுக்குத் தவித்த மனசில் இவற்றின் கட்டுக்களே வேண்டாம் என்கிற வைராக்கியம் உண்டானால் அப்புறம் பேரின்ப மயமாவதற் கான சாதனைகளில் இறங்கி முடிவில் அம்பாள் அருளால் பேரின்பமாகவே ஆகலாம். அதை விடப் பெரிய பலன் வேறில்லை. முடிந்த முடிவாக அம்பாள், பக்தனை இந்தப் பர மானந்த ரசத்தில் திளைத்தும் கொண்டிருக்கு மாறு அனுக்கிரஹம் செய்கிறாள்.

— நன்றி: சுவாமிகளின் 'தெய்வத்தின் குரல்' முதல்பாகம்.

# சமயங்களின் நோக்கம் சமுதாயத் தொண்டே

பேராசிரியை மரியம் உல் ஆசியா,
எம்.ஏ;பி.எட்;எம்.:.பில்;எம்.எல்.ஏ.

**திருச்சி மாவட்டம் அரவாக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பேராசிரியை மரியம் உல் ஆசியா, எம்.ஏ.,பி.எட்.,எம்.:.பில். அவர்கள் காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் 57வது பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு, போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கி ஆற்றிய சிறப்புரையின் ஒரு பகுதி இங்கு எடுத்து வெளியிடப்பட்டுள்ளது.**

உலக சமயங்கள் யாவும் உலக மக்களின் நன்மைக்காக உருவானவை என்பதை நாம் இன்று அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். சமயம் என்ற சொல் எதைக் குறிக்கிறது? சமைத்தல் என்றால் பக்குவப்படுத்துதல் என்பது பொருளாகும். மனித உள்ளங்களைப் பக்குவப்படுத்துவதே சமயத்தின் தலையாய பணி. இதைத்தான் சமயம் என்ற சொல்லின் பொருள் விளக்கமாகப் பெரியோர்கள் நமக்குச் சொல்லுகிறார்கள்.

இன்றைக்கு நாம் விழா கொண்டாடிக் கொண்டிருக்கும் இவ்விழாவின் நாயகர் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளை உலகிற்கு வழங்கியவர்கள் பெரியவர் என்று பெரியோர் களால் அழைக்கப்படும் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் ஆவார்கள். அவர்கள் மதங்களின் ஒற்றுமை பற்றி திருவாய் மலர்ந்துள்ள ஒரு உயர்ந்த கருத்தினை இன்று இங்கு நான் எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன். தெய்வத்தின் குரலாக நம் சுவாமிகள் ஒலிக்கிறார்.

''எல்லா சமயங்களும் கடவுளை வழிபட ஏற்பட்டனவே ஆகும். எல்லா சமயங்களும் கடவுள் ஒருவர் என்றே சொல்கின்றன. ஒருவரேயான அந்தக் கடவுளை நாம் எந்த மதத்தின் மூலம் வழிபட்டாலும் அவர் அதை ஏற்றுக் கொள்ளத்தான் செய்வார்.''

''கோயில், சர்ச், மசூதி, விஹாரம் முதலிய கட்டடங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படலாம். உள்ளே இருக்கிற மூர்த்தி அல்லது சின்னம் மாறுபடலாம். ஒவ்வொன்றிலும் சடங்குகளும் வேறு வேறாக இருக்கலாம். ஆனால் அநுக்கிரகம் செய்கிற பரமாத்மா மாற வில்லை. ஒவ்வொரு தேச ஆசாரத்தையும், ஒவ்வொரு ஜனக் கூட்டத்தின் மனப்பான்மையையும் பொறுத்துப் பல்வேறு சமயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் ஒரே பரமாத்மாவை அவரவர் மனோபாவப்படி பக்தி செய்து அவரோடு சேருவதற்கு வழி செய்பவையே!''

காஞ்சிப் பெரியவர்களின் இப்பொன்னான கருத்தை உலகம் தலைமேற்கொண்டு போற்றத் தொடங்குமானால் சமயத்தின் பெயரால் நாட்டில் இனிப் பூசல்கள் உண்டாகவே உண்டாகாது என்பதை நான் உறுதிப்படக் கூறுவேன்.''ஒன்று பரம்பொருள் நாம் அதன்மக்கள் உலகுஇன்பக்கேணி'' என்றாரே மகாகவிபாரதி. அதை நாம் மறந்து போகலாமா? 'மன்னுயிர் எல்லாம் கடவுளின் வடிவம், கடவுளின்மக்கள்' அவ்வாறிருக்க நமக்குள் ஏன் பூசல்? நாம் வணங்கும் கடவுளரின் பெயரால் நாம் ஏன் பூசல்கள் செய்து கொள்ள வேண்டும்? இத்தகைய வீண் பூசல்கள் கூடாது என்பதற்காகத்தான் இன்றைய விழா நாயகர், சுவாமிகள் அனைத்து மக்களுக்கும் பொதுவாக,

''சரணாகத ரட்சக, ஆபத் பாந்தவ'' என்கிற மகா மந்திரத்தை உருவாக்கித் தந்து உலக ஒற்றுமைக்காக சமாதானத்திற்காகப் பாடுபட்டு வருகிறார்கள்.

உலகில் உள்ள ஐந்து கண்டங்களிலேயே, நம் இந்திய நாடு அமைந்துள்ள ஆசியாக் கண்டம் தான் அளவிலா பெருமை வாய்ந்தது. ஏனென்றால் உலகம் உய்ய வழி காட்டிய ஸ்ரீ ஆதிசங்கரர் அவதாரம் செய்ததும் இந்த ஆசியாக் கண்டத்தில் தான், புத்தர், இயேசு, நபிகள் நாயகம், குருநானக் முதலான சமயச் சான்றோர்கள் திரு அவதாரம் புரிந்ததும் இந்த ஆசியாக் கண்டத்தில் தான்.

ஆசியாக் கண்டத்திலும் உயர்ந்தது அதில் அமைந்து விளங்கும் நம் பாரத கண்டம், இப் பாரத கண்டத்தில் தோன்றிய எண்ணற்ற மகரிஷிகளும், மகான்களும், அறிஞர்களும், கவிஞர்களும், முத்தர்களும், சித்தர்களும் உலக மக்கள் எல்லாம் ஒன்று பட்டு வாழ வேண்டும் என்ற உயர்ந்த உண்மை உள்ளம் கொண்டு அரிய கருத்துக்களை நமக்கு வழங்கியுள்ளார்கள்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்று திருவாய் மலர்ந்தார் திருமூலர், அவர் வாழ்ந்த நாடு இந்த நாடு, ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று உலக மக்கள் எல்லோரையும் உடன் பிறந்த சுற்றமாகப் பாடிய கணியன் பூங்குன்றனார் என்ற கவிஞர் பெருமகனார் வாழ்ந்த நாடு இந்த நாடு.

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்று பிறப்பால் எல்லோரும் சமம் என்று பறை சாற்றிய வள்ளுவர் தம்மை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டதும் இத்திருநாடு தான்.

மலையிலே உருவாகும் நதி, மகாநதியாகி பல கிளைகளாகப் பிரிந்து பாய்ந்து இறுதியில் கடலில் போய் ஒன்றாகக் கலக்கிறது. இந்தக் காட்சியைப் பாடவந்த கவிச் சக்கரவர்த்தி கம்பர் அதிலேயும் உலக ஒற்றுமையை-உலக சமயங்களின் ஒற்றுமையைப் போற்றிப் பாடு கிறார். நதி பல கிளைகளாகப் பாய்ந்து நாட்டைச் செழிப்பாக்குவதைப் போலவே சமயமும் பல கிளைகளாகப் பிரிந்து ஆன்மீகக் கருத்துக்களை அள்ளி வழங்குகிறது. முடிவில் நதியின் பல கிளைகளும் ஒரு கடலில் சங்கமம் ஆவதைப் போலவே சமயங்களின் பல பிரிவு களும் ஒரே பரம் பொருளில் சங்கமமாகின்றன என்று சமய ஒற்றுமையைப் போற்றிப் பாடிய அந்த மகா கவிஞரை-கவிச்சக்கரவர்த்தி கம்பரை உலகினுக்கே தந்து உயர்புகழ் கொண்ட நாடும் நம் பாரத மணித் திருநாடு தான்.

''கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைகளாலும்
இயம்பரும் பொருள் ஈதென்னத்
தொல்லையில் ஒன்றே ஆகித்
துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயம் சொல்லும்
பொருளும் போல் பரந்த தன்றே''

என்கிற கவிச் சக்கரவர்த்தி கம்பரின் இராமா யணப் பாடலைப் படித்து உணர்ந்த எவரும் சமயத்தின் பெயராலே இந்த நாட்டில் இனி பேதம் பாராட்டக் கூடாது என்பதுதான் என் கருத்து.

இராமர், தாம் சக்கரவர்த்தி திருமகனாக திகழ்ந்த போதும் காட்டில் வேடுவனான குகனை அணைத்துத் தம் சகோதரன் என்று போற்றுகிறார். குரங்கினத்தில் தோன்றிய சுக்கிரீவனை அணைத்துத் தம் சகோதரன் என்று போற்றுகிறார். இலங்கையில் அரக்கர் குலத்தில் தோன்றிய வீடணனை அணைத் துத் தம் சகோதரன் என்று போற்றி கிறார். இவ்வாறு யாவரையும் பேதமின்றிச் சகோதரராகப் பாவிக்கக் கற்றுக் கொடுப்பவர் ஸ்ரீ இராமபிரான், சகோதர நேயத்தை வளர்ப் பது ஸ்ரீ இராமாயணம், சகோதர நேயத்தை வளர்ப்பது ஸ்ரீ இராமாயணம். கங்கை வட கோடி, இலங்கை தென்கோடி, கங்கையிலே ஒரு தம்பி இலங்கையிலே ஒரு தம்பி எஃ்றால் இடையில் உள்ளவர்கள் எல்லோருமே தம்பிகள் என்பது தானே இராமாயணம் நமக்கு உணர்த்தும் பொருள்.

''குகனொடும் ஐவர் ஆனோம் முன்பு; பின்
குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனோம். எம்முழை
பண்பில் வந்த
அகனமர் காதல் ஐய, நின்னொடும் எழுவர்
ஆனோம்
புகலரும் கானம் தந்து புதல்வரால்
பொலிந்தான் உந்தை''

என்ற இராமாயணப் பாடல் உலக சகோதர நேயத்தை அலலவா நமக்கு கற்பிக்கிறது. 'எல் லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல் லாமல் வேறொன்றறியேன் பராபரமே'' என்று பாடிய அருளாளர்கள் அவதரித்த நாட்டிலே இன்னும் ஒற்றுமை ஒளி பரவாமல் வேற்றுமை இருள் பரவ விடலாமா?

## கோவிந்த நாம மகிமை

புரட்டாசி மாதமது வருகின்றது
புனிதன் கோவிந்தன் நாமமதைப் போற்று
நெஞ்சே!
படியேறித் திருப்பதியைப் பாடு நெஞ்சே
படியேறித் திருப்பதியைப் பாடு நெஞ்சே
படிப்படியாய் ஏற்றம் வரும் பாரு நெஞ்சே

(புரட்டாசி)

அடியார்க்கு அருள்புரியும் பரந்தாமன்-அவன்
கொடியாரை வேரறுக்கும் கோவிந்தன்
மீனம் ஆமை வராகமாய் வந்துதித்தான்-அவன்
நரசிங்கம் வாமனனாய் அவதரித்தான்

(புரட்டாசி)

அவன் பரசுராமன் ரகுராமன் பலராமன்-அன்று
பார்த்தனுக்குத் தேரோட்டும் பூபாலன்
கோவிந்தா என்றழைக்க ஓடிவந்தான்-அவன்
கோதை எங்கள் பாஞ்சாலி துயர் துடைத்தான்

(புரட்டாசி)

ஆழ்வார்கள் பாடிப்பாடி உருகினரே!-அவன்
கோவிந்த நாமம் அதைப் பருகினரே,
கோவிந்தன் நாமம் சொன்னால் துயர்தீரும்
வைகுந்த வாசல் உந்தன் அருகில் வரும்

(புரட்டாசி)

— **கோவிந்ததாசன்**



# கம்பரின் இராமாவதாரம்

**டாக்டர் த. அமிர்தலிங்கம்** [30]

இராமபிரானைத் தரிசிக்கும் பேறு பெற்ற அகத்திய மாமுனிவரின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ''அருளுக்கு அரசே! தண்டக வனத்திற்குத் தாங்கள் வருகை தந்து கடந்த பத்து ஆண்டுக்காலமாக அங்கு வாழ்ந்துள்ளீர்கள் என்பதை நான் கேள்விப்பட்ட நாள் முதலாக ஒரு நாள் என் தவக்குடிலுக்கும் வருகை புரிவீர்கள் என்று நான் எதிர்பார்த்து வான்மழையின் வரவு பார்க்கும் வாடிய பயிரைப் போல நானும் ஆவலுடன் வாடியிருந்தேன். இன்று தங்கள் வருகையால் என் வாட்டம் தீர்ந்தது. என் தவம் பலித்தது''. என்று தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார் அகத்தியர். இராமரையும், அவர் தேவியையும் இலக்குவனையும் விருந்துபசாரங்களைச் செய்து போற்றுகிறார் அவர்.

''இனி எனக்கு ஒரு குறையும் இல்லை. வேதங்கள் வாழ்த்தும் பரம்பொருளை—தேவரும் சகலலோகத்தவரும் மனத்தால் மட்டும் எண்ணிப் பார்த்துப் பரவசப்படுகிற பரம்பொருளை என் கண்ணாரவே கண்டு களித்து விட்டேன். முப்பத்திரண்டு தருமங்களும் இனி உலகில் தழைத்தினிதோங்கிச் செழிக்கும் என்பதற்கு ஏதும் ஐயம் உண்டோ? கொடிய அரக்கர்கள் அழிவார்கள். விடவேரான அரக்கரை வேரோடு அறுக்கும் வைத்தியராய் நீங்கள் வந்து உரிய இடத்தில் சேர்ந்து விட்டீர்கள். இனி தேவர்கள் உய்ய தடை என்ன உள்ளது?'' என்றும் வாஞ்சை மொழிகளைக் கூறி இராமரைப் போற்றுகிறார் அகத்திய மாமுனிவர்.

''வாழுமறை வாழுமனு நீதியறம் வாழும்
தாழும்இமை யோர்உயர்வர் தானவர்கள் தாழ்வார்
ஆழியுழவன் புதல்வ! ஐயமிலை மெய்யே
ஏழுலகம் வாழுமினி இங்குறைதி என்றான்.''

இராமபிரானும் அகத்தியரின் அருந்தவ சீலத்தைப் போற்றிப் புகழ்கிறார். 'மகா முனிவரே! தங்கள் அருளாசி பெற்ற எனக்கு ஆகாததும் என்ன இருக்க முடியும்? அரக்கர்களின் ஆணவம் அழியுமாறு அவர்களை விரைந்து கொல்ல நான் உறுதி கொண்டு விட்டேன். என்னை அதற்கு அனுகிரகித்து அனுமதியும் அளிப்பீராக'' என்று வேண்டுகிறார் இராமபிரான். ''ஏழுலகம் உய்யட்டும், அரக்கர்கள் அழியட்டும்'' என்று இராமருக்கு ஆசி கூறுகிறார் அகத்தியர். 'மகாவிஷ்ணுவிற்காக விசுவகர்மா செய்த வில்லும், என்றும் குறையா அம்பறாத் தூணியும், உலகமும் ஈடாகாத ஒப்பற்ற இரத்தின வாளும், சிவபெருமானின் எரிமுகப்பேரம்பும் இதோ அளித்தேன். ஏற்றுக் கொள் இராகவா'' என்று இராவணவதத்திற்கான திவ்வியாஸ்திரங்களையும் உரிய இராமபிரானிடத்தில், உரிய நேரத்திலேயே சேர்ப்பித்து விடுகிறார் முக்கால மகிமையும் முற்றுமுணர்ந்தவரான அகத்தியமா முனிவர்.

''விழுமியது சொற்றனை இவ்வில்லிது இவண் மேனாள்
முழுமுதல்வன் வைத்துளது மூவுலகும் யானும்
வழிபட இருப்பதிது தன்னை வடிவாளிக்
குழுவழுவில் புட்டிலொடு கோடியென நல்கி''

'இப்புவன முற்றுமொரு தட்டினிடையிட்டால்
ஒப்புவர விற்றென உரைப்பரிய வாளும்
வெப்புருவு பெற்றஅரன் மேருவரை வில்லா
முப்புரம் எரித்த தனி மொய்கணையும் நல்கா''

என்று மூவுலகும் வணங்கத்தக்க மகாவிஷ்ணு வில்லையும், முப்புரம் எரித்த சிவபெருமானின் அம்பையும் அகத்தியர் இராமபிரானுக்கு இரத்தின வாளுடனும், வற்றாத அம்பறாத் தூணியுடனும் வழங்கியமையைப் போற்றிப் பாடுகிறார் நம் கவிச்சக்கரவர்த்தி கம்பர்,

''இராகவ! இங்கிருந்து இரண்டுயோசனை தூரத்தில் பஞ்சவடி உள்ளது. மலைகளும் நதிகளும், அருவிகளும், சோலைகளுமாக அவ்



விடத்தின் இயற்கை எழில், மிக்க ஆனந்தமாக இருக்கும். செந்நெல்லும், வாழையுமாக வளங்கொழிக்கும் அப்பஞ்சவடி நீ சீதையுடன் வாழ்ந்திருப்பதற்கு மிகவும் உகந்த இடமும் ஆகும். காவிரிக்கு ஒப்பான கவின்நதிகளும் அங்கிருப்பதால் அவற்றில் நீராடி அங்கு வதியும் நாரைகளுடனும், அன்னப் பறவைகளுடனும் விளையாடி மகிழ்ந்திருக்கலாம்'' என்று அகத்தியர் கூற, அவரிடம் விடைபெற்றுப் பஞ்சவடிக்குப் புறப்படுகிறார் இராமபிரான்.

பஞ்சவடிக்குப் புறப்பட்டு இராமரும், சீதையும், இலக்குவனும் செல்ல, அகத்திய மாமுனிவர்தம் சிந்தையும் அவர்களையே தொடர்ந்து பின்செல்கிறது என்று வர்ணிக்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

''ஏகியினி அவ்வயின் இருந்துறைமின் என்றான்
மேகநிற வண்ணனும் வணங்கி விடை
கொண்டான்
பாகனைய சொல்லியொடு தம்பிபரி விற்பின்
போகமுனி சிந்தை தொடரக் கடிது போனான்'

மூவர் பின்னும் முனிவர் மனம் சென்றது. அதிலும் இராமன் தம்பி இலக்குவன் பின்பாக அகத்தியர் தம் சிந்தை சென்றது என்று வர்ணிக்கும் கம்பர் பஞ்சவடியில் சீதைக்கு ஏற்படப் போகும் துன்பத்தை, திரிகாலமும் உணர்ந்த அகத்தியமாமுனிவர் அறிந்திருப்பதை குறிப்பினால் இங்கு சுட்டியிருக்கும் நயம் இப்பாடலில் நாம் உணர்ந்து மகிழத்தக்கது.

காடுமலைகள் பல கடந்து பஞ்சவடியை நோக்கிச் செல்கிறார்கள் மூவரும். அவ்வாறு செல்லும் வழியில் கருமையான ஒரு பெரிய மலையில், பொன்னிறமான ஒரு பெரிய கழுகு அமர்ந்திருக்கக் கண்டு அதை ''அரக்கனோ'' என்று ஐயப்படவும் செய்கிறார்கள். அக்கழுகின் உடலின் பொன்னிறத்தால் வானமும் பொனனிறம் பெற்றுத் திகழ்கிறது. அதன் கால்களின் செவ்வொளியால் அது அமர்ந்திருக்கும் கருமலையும் செம்மலைபோல் திகழ்கிறது. மந்திரமலை போன்ற பேருருவம் கொண்ட அக்கழுகு இந்திரனின் அங்குசம் போல் கூர் பெற்று விளங்கிடும் தன் அலகால் குத்திக் கிழித்து இரையை உண்பதும், பின் தன் அலகினை மலையில் தேய்த்துக் கூர் தீட்டிக் கொள்வதுமாக அங்கு வீற்றிருக்க, அதைக் காணும் இராமலக்குவனர்கள் 'ஆரக்கனோ அல்லது கருடனோ இக்கழுகு'' என்பதாக ஐயுற்று எச்சரிக்கையுடனே அம்மலை வழியைக் கடக்க முற்படுகிறார்கள்.

பிரஸ்ரவணம் எனும் அம்மலையில் அமர்ந்திருக்கும் அக்கழுகு இரையுண்பதை விட்டு, ''வரும் இம்மூவரும் யாரோ'' என உற்று நோக்குகிறது. இராமரின் பேரழகில் மயங்கித் திளைக்கும் அக்கழுகு, இராமரைத் தேவரோ

அல்லது திருமால், பிரம்மா; சிவபெருமான் ஆகிய மூவரில் ஒருவரோ, அல்லது மன்மதனோ என்று ஐயுற்று மயங்குகிறது.

''புரந்தரன் முதலிய புலவர் யாரையும்
நிரந்தர நோக்குவென் நேமியானும் அவ்
வரம்தரு மிறைவனும் மழுவலாளனும்
கரந்திலர் என்னை யானென்றும் காண்பெனால்''
''காமன் என்பவனையும் கண்ணின்
நோக்கினேன்
தாமரைச் செங்கனித் தடக்கை வீரர்கள்
பூமரு பொலங்கழற் பொடியினோடு ஒப்
பாம் அலன் வருபவர் யார்கொலாம் இவர்.''

''இந்திரனை யான் கண்டுள்ளேன். திருமால், பிரம்மா, சிவபெருமான் ஆகிய மூவரையும் யான் கண்டுள்ளேன். மன்மதனையும் யான் கண்டுள்ளேன். அவர்களை விடவும் பேரெழில் கொண்ட இவர் யாரோ? இவருடன் வரும் திருமகளே போல்வாள் அந்நங்கையும் யாரோ'' என்று ஐயுற்று அவர்களையே வைத்த விழி வாங்காமல் உற்று உற்று பார்க்கும் அக்கழுகு ''என் ஆருயிர் நண்பன் தசரதன் சாயல் ஆடவர் இருவரிடமும் இருப்பதால் இவர்கள் இருவரும் தசரதரின் மக்களாக இருந்தாலும் இருப்பார்களோ'' என்பதாகவும் ஐயுறுகிறது. ''இவர்களையே விசாரித்து அறிந்து கொண்டு விடுவோம்'' என ஒரு தீர்மானத்திற்கு வரும் அக்கழுகு ''வரிசிலை காளையீர்! நீவிர் யார்? நான் அறியக் கூறுங்கள்'' என்று ஆர்வமுடன் வினவுகிறது.

அரக்கனோ எனத் தாம் கொண்ட ஐயத்திற்கு இசையவே கழுகு பேசவும் காண்கிறார்கள் இராமலக்குவனர்கள். அறிமுகம் இல்லாத எவரிடமும், ஐயத்திற்கு இடமாகும் எவரிடமும் உண்மை நிலையைக் கூறுதல் விவேகமாகாது என்பதை அவர்கள் அறிந்திருந்தாலும், ஈடு இணையில்லாத தம் வீரம் காரணமாக ''இக்கழுகு அரக்கனே ஆயினும் ஆகுக உண்மையே கூறுவோம்'' என்பதாகத்துணிந்து ''கடல்சூழ் உலகம் யாவும் ஆண்ட சக்கரவர்த்தி தசரதர் புதல்வர்களே யாம்'' என்று கூறுகிறார்கள். தம்யூகம் மெய்யானதை, கண்டு அளவிலா ஆனந்தமுறும் அக்கழுகு, மலையிலிருந்து மண்ணிற்குப் பறந்து வந்து இராமலக்குவனர் இருவரையும் அணைத்துத் தழுவி மகிழ்கிறது. ''தசரதர் நலம் தானே'' என்று ஆர்வமுடன் வினவுகிறது கழுகு, கழுகின் வாஞ்சையைக் காணும் இராமலக்குவனர்கள் ''இது நமக்குப் பகையான அரக்கனாக இராது' என்று ஐயமும் தீர்ந்து ''சத்தியத்தைப் பேணி தசரதர் துறக்கம் போய் சேர்ந்தார்'' எனும் உண்மையைக் கூறுகிறார்கள். தசரதரின் மறைவினைக் கேட்டதும் ''ஆ ஐயோ!'' என அலறியவாறு அக்கழுகு மூர்ச்சித்து மயங்கி விழுகிறது.

இராமலக்குவனர் இருவரும் வாஞ்சை மிக்க அக்கழுகை வாரி எடுத்து அதன் மூர்ச்சையைத் தெளிய வைக்கிறார்கள். மயக்கம் நீங்கி எழும் அக்கழுகு, மன்னர் தசரதர் மறைவு குறித்துப் புலம்பியழுகிறது. ''அருமைநண்பா தசரதா! சம்பராசுரனோடு நீ யுத்தம் புரிய வானகம் வந்த நாளில் நாமிருவரும் ஒருவரை ஒருவர் கண்டு பேசிப் பழகி நட்பு பூண்டோமே! உனக்குத் துணையாக நானும் அப்போரில் ஈடு பட்டு சம்பரன் சேனையைக் கலக்கினேனே! உள்ளம் ஒத்த அன்பால் நீயும் என்னைப் பாராட்டி ''நீ உயிர், நான் உடல், என்றென்றும் நம் நட்பு நீடிக்கும் என்று பூரித்தாயே! அத்தகைய நம் உணர்வு பூர்வமான நட்பை மறந்து, உயிரான நான் இன்னும் வாழ்ந்திருக்க என்னைத் தனியே விட்டு உடல் நீ பிரிந்து போகலாமா? அரசர்க்கெல்லாம் அரசனே! பொய்ம்மைக்குப் பகைவனே! சத்தியத்தின் காவலனே! இனி உனை நிகர்ப்பார் ஒருவர் உண்டா இவ்வுலகில்! உன் மறைவால் அமருலகக் கற்பகம் இனி கொடைக்கு நானே என்று கர்வம் கொள்ளுமே! உன் மறைவால் இப் பூமியும் இனி பொறைக்கு நானே என்று கர்வம் கொள்ளுமே! உன்வெண்கொற்றக் குடை மறைந்த காரணத்தால் இனி குளிர்ச்சிக்கு நானே என்று வான்நிலவும் கர்வம் கொள்ளுமே! நீ உயிர் நீங்கினாய் எனக்கேட்டும் இன்னும் என் உயிர் நீங்கிலதே! இது என்ன கொடுமை? தசரதா! ஆருயிர் நண்பா! இதோ எரிமூழ்கி இப்போதே என் உயிரைத் துறந்து நான் உன்னிடமே வந்து சேருகிறேன்'' என்று மனம் பதைபதைத்து துடிதுடித்து அக்கழுகு கண்ணீர் பெருக்கக் காணும் இராமலக்குவனரும் நெஞ்சுருகிப் போகிறார்கள். தம் தந்தையின் பொருட்டு தாளாத சோகம் கொண்டு துடிக்கும் இக்கழுகு யாராக இருக்கும் என்பதாகவும் மயங்குகிறது அவர்தம் நெஞ்சம்.

''மைந்தர்காள்! நான் கருட பகவானின் தம்பியும் சூரியனின் தேரோட்டியுமான அருணனின் இளைய மகன். அளவிலாத காலத்திற்கு முன்னே தோன்றியவன். என் பெயர் ஜடாயு'' என் மூத்தவனே சம்பாதி'' என்று அக்கழுகு கூற, அதைக் கேட்கும் இராமலக்குவனர்கள் மாண்ட தம் தந்தையே மீண்டும் உயிருடன் வந்ததுபோன்றபேரானந்தம் கொள்கிறார்கள்.

''அருணன்தன் புதல்வன்யான் அவன்படரும்
உலகெலாம் படர்வென் ஆழி
இருள்மொய்ம்பு கெட ஆழிதுரந்த தயரதர்க்கு
இன்
னுயிர்த் துணைவன் இமையோ ரோடும்
வருணங்கள் விரிகின்ற காலத்தே
வந்துதித்தேன் கழுகின் வேந்தன்
தருணங்கொள் பேரொளியீர் சம்பாதி
பின்பிறந்த சடாயு என்றான்''

''ஆண்டவன் ஈதுரை செய்ய அஞ்சலித்த
மலர்க்கையார் அன்பி னோடும்
மூண்டபெருந் துன்பத்தான் முறைமுறையின்
நிறைமலர்க்கண் மொய்த்த நீரார்
பூண்டபெரும் புகழ் நிறுவித் தம்பொருட்டாற்
பொன்னுலகம் புக்க தாதை
மீண்டனன் வந்தான் அவனைக் கண்டனரே
ஒத்தனர்அவ் விலங்கற் றோளார்.''

இராமலக்குவனரைத் தம்மிரு சிறகுகளால் இறுக அணைத்துத் தழுவி மகிழும் சடாயு ''மக்களே! எனக்கு விடை தாருங்கள், தசரதன் மாண்டபிறகு இனி நானும் உயிர் தரித்திருக்க மாட்டேன்; எரிமூழ்கி இப்போதே என்னுயிர் துறப்பேன். தந்தைக்குச் செய்



சென்னை அருள்மிகு பார்த்தசாரதி ஆலயத்தில் 15-8-91 அன்று சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழா சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் திருமிகு டி. எம் செல்வகணபதி அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள்.

வதற்கு உண்டான பிதுர்க்கடனை எனக்கும் நீங்கள் செய்துவிடுங்கள்'' என்று கூற, இராம லக்குவனர்கள் அதைக் கேட்டுத் தாளமுடியாத துக்கத்தால் கண்ணீர் பெருக்குகிறார்கள். நா தழுதழுக்க ''தந்தை இல்லாக் குறை தீர்க்க தந்தையாக வந்தீர்கள் என்று மகிழ்ந்த எங்கள் மகிழ்ச்சி கனவாக வேண்டுமா தந்தையே! மைந்தர்களை இங்கே கானகத்தில் தனியே தவிக்கவிட்டு எரிமூழ்குவேன் என்று கூற எப்படி மனம் கொண்டீர்கள் தந்தையே! அதற்கு நாங்கள் ஒரு போதும் சம்மதியோம்'' என்று கூறி இருவரும் சடாயுவின் இருசிறகு களைப் பிடித்துக் கொண்டு விடுகிறார்கள். மைந்தர்களின் கட்டளையை மீற முடியாத சடாயுவும் ''கலக்கம் வேண்டாம் கண் மணிகாள்! நீங்கள் அயோத்தி திரும்பிய பிறகு நான் எரிமூழ்குவது உறுதி. ஆம்! தசரதர் மாண்ட பிறகு அயோத்தி அரசாள வேண்டிய நீங்கள் ஏன் கானகம் வந்தீர்கள்? உங்களுக்குத் தீமை புரிந்தவர் தேவர்கள், அசுரர்கள், நாகர்கள் யாவரேயாயினும் கூறுங்கள், அவர் களைக் கொன்று அரசினை மீட்டுத் தருகிறேன்" என்று சடாயு வீரமுழக்கம் செய்கிறார்.

இலக்குவன் சிற்றன்னை கைகேயினால் வனம் வர நேர்ந்த வரலாற்றைச் சடாயு விற்குக் கூறுகின்றான். தம்பி பரதன் ஆள, இராமர் புரிந்த தியாகம் சடாயுவைப் புள காங்கிதம் கொள்ளச் செய்கிறது. ''தாயின் கட்டளையைத் தலைமேற் கொண்டாய், தம்பிக்கு அரசளித்தாய்! தந்தையைச் சத்திய வந்தன் ஆக்கினாய்! வள்ளலே இராகவா! உனை மைந்தனாகப் பெற தசரதனும் நானும் என்ன தவம் செய்தோமடா!'' என்று இராமரைக் கட்டித் தழுவி ஆனந்தக் கண்ணீர் பெருக்குகிறார் சடாயு.


''உந்தை உண்மையன் ஆக்கிஉன் சிற்றவை
தந்த சொல்லைத் தலைமேல் கொண்டு
வந்த தம்பிக்கு உதவிய வள்ளலே
எந்தை வல்லது யாவர்வல்லர் எனா?''

''அல்லித் தாமரைக் கண்ணனை யன்புறப்
புல்லி மோந்து பொழிந்துகண் ணீரினை
வல்லை மைந்த அம்மன்னையும் என்னையும்
எல்லையில் புகழ் எய்துவித்தாய் என்றான்.''


சடாயுவிற்கு 'ஜனகன் ஈன்ற தையல்' எனச் சீதாதேவியை அறிமுகப்படுத்தி வைக்கிறார் இராமபிரான். இராமருடனே வனம் போந்த தன் மருமகளின் கற்பின் திறத்தை மனமாரப் போற்றி மகிழும் சடாயு ''பஞ்சவடிக்கு வழி நான் காட்டுகிறேன். எனைப் பார்த்தவாறே வாருங்கள்'' என்று வானில் பறந்து வழிகாட்ட அவர் பறக்கும் திசை பார்த்துப் பஞ்சவடிக்கு பயணத்தைத் தொடர்கிறார்கள் இராமர், சீதை, இலக்குவன் ஆகிய மூவரும்.

(தொடரும்)

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



மாண்புமிகு முதல்வர் **புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா** அவர்களிடம்
இலண்டனிலிருந்து மீட்டு வரப்பட்ட பத்தூர் நடராஜர் சிலையை இங்கிலாந்து
நாட்டின் இந்தியத் தூதர் மாண்புமிகு எல். எம். சிங்வி ஒப்படைக்கிறார்.
தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமிகு டி. வி. வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ்.,
அவர்கள் உடன் உள்ளார்.



அந்நிய மண்ணில் நாம் வழக்காடி வென்ற பத்தூர் அருள்மிகு நடராசர் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் **புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா** அவர்கள் குத்துவிளக்கேற்றிவைத்து வழிபாடு செய்கிறார்கள்.